பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | மாசி 06 | புதன்கிழமை | (18-02-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 61

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# பிரபாவின் எதிர்பார்ப்பின்படி
# கூட்டமைப்பு ஒன்றுபட்டுள்ளது

## சு.ப.தமிழ்ச்செல்வன் அறிவிப்பு

(கிளிநொச்சி)

**விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் எதிர்பார்ப்பின்படி தமிழ்க்கூட்டமைப்பினர் அனைவரும் கொள்கை ரீதியாக ஒன்றுபட்டு நிற்பதென்று முடிவெடுத்துள்ளனர் என விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.**

நேற்று தமிழ்க் கூட்டமைப்பினருடனான சந்திப்பை அடுத்து பத்திரிகையாளர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

கூட்டமைப்பினருடனான இன்றைய சந்திப்பில் அரசியல் சூழல் பற்றியும் எதிர்வரும் பொதுத் தேர்தல் குறித்தும் கலந்துரையாடினோம். கூட்டமைப்பின் தேர்தல் சின்னம் குறித்தும் ஆராய்ந்தோம்.

இது குறித்து இறுதியான முடிவு பின்னர் வெளியிடப்படும். இம் முறை புலிகள் நேரடியாக தேர்தலில் போட்டியிடவில்லை. எனினும் கொள்கை ரீதியாக ஒன்றுபட்டுச் செயற்பட்டு தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளியிடுவது முக்கியமானதாகும்.

தேர்தலில் ஏனைய கட்சிகள் போட்டியிடுவதற்கு நாம் எவ்வித மான தடையும் விதிக்கவில்லை.

(12ம் பக்கம் பார்க்க)

# கடந்த இரு வருட ஆட்சியில் பல தவறுகள் நடந்துள்ளன

## ஏற்றுக் கொள்கிறார் பிரதமர்

(நமது நிருபர்)

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண இரண்டு பிரதான அரசியல் கட்சிகளுக்கும் வாய்ப்புக்கள் இருந்தன.

இதற்காக நாட்டு மக்களினதும், சர்வதேச சமூகத்தினதும் அழுத்தும் இருந்தது. இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின் போது தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டபின், அடுத்த பொதுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் ஆரம்ப தினமான நேற்று நாட்டு மக்களுக்கு தனியார் தொலைக் காட்சி ஒன்றின் மூலம் முதற்துடவையாக ஆற்றிய உரையின் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மேற

(12ம் பக்கம் பார்க்க)





# புலிகளுடன் பேச்சு நடத்தாவிட்டால் சுதந்திர முன்னணிக்கு ஆதரவு

## ஜாதிக சங்க சம்மேளனம் அறிவிப்பு

(கொழும்பு)

விகாரமாதேவி உச்சிமாநாட்டின் முடிவுகளுக்கு ஜனாதிபதி இணங்கினால் எதிர்வரும் தேர்தலில் ஜே.வி.பி-சுதந்திரக் கட்சி கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாக ஜாதிக சங்க சம்மேளனம் அறிவித்துள்ளது.

தமது ஆதரவு இம் முன்னணிக்கு ஒரு திருப்பு முனையாக அமையுமென கவுன்சிலின் செயலாளர் வண அத்துரலியே ரட்ணதேரர் தெரிவித்தார்.

மேலும் விடுதலைப் புலிகளை பலப்படுத்தும் நடவடிக்கையை எடுத்தமைக்காக ஐ.தே.முன்னணி அதனைப் பொறுப்பேற்க வேண்டும்.

நாட்டின் தேசிய பாதுகாப்பு இதனால் பலவீனமடைந்துள்ளது. அத்துடன் மதமாற்ற தடைச் சட்டம் தொடர்பாக எமது கோரிக்கைகளை ஏற்று ஐ.தே.முன்னணி சாதகமாக பதிலளிக்கவில்லை. எனவே அவர்களுடன் எந்தவொரு புரிந்துணர்வுக்கும் செல்லவேண்டிய அவசியம் எமக்கு இல்லை.

விடுதலைப் புலிகளுடனான

(12ம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாண மாவட்டத்தின் கூட்டமைப்பு வேட்பாளர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தேர்தல் தொகுதியில், தமிழ்க் கூட்டமைப்புச் சார்பாக நிறுத்தப்படவுள்ள வேட்பாளர்கள் தெரிவு கூட்டமைப்புக்குள் இடம் பெற்றிருப்பதாகத் தெரிய வருகிறது.

இதன் அடிப்படையில் வேட்பாளராக மா.க.ஈழவேந்தன், சூசைசிறில், ப.கனகலிங்கம், திருமதி சிதம்பரநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மாவை சேனாதிராசா, என்.ரவிராஜ், எஸ். கஜேந்திரன், சி.வி.கே.சிவஞானம், எம்.கே. சிவாஜிலிங்கம், சுரேஸ் பிறேமச்சந்திரன் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதாகத்

(12ம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கூட்டமைப்பினருடன் தமிழ்ச்செல்வன் சந்திப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளினால் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வடக்குக் கிழக்கு இடைக்கால நிர்வாகசபை கோரிக்கையினை முதன்மைப்படுத்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுவதென்று நேற்று விடுதலைப் புலிகளுக்கும், கூட்டமைப்பு பிரதிநிதிகளுக்குமிடையில் கிளிநொச்சியில் நடந்த சந்திப்பில் முடிவு செய்யப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் அரசியல்துறை நடுவச் செயலகத்தில் நேற்று முற்பகல் 11.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை இச் சந்திப்பு இடம் பெற்றது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என்பது குறித்தும் எக் கொள்கையினை மக்கள் முன் வைப்பது என்பது குறித்தும் வேட்பாளர் நியமனம் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

(12ம் பக்கம் பார்க்க)

# சுதந்திர முன்னணி ஆட்சி அமைத்ததும் சமாதான முயற்சி முன்னெடுக்கப்படும்

## அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினால் அமைக்கப்படும் அரசாங்கம் தற்போதைய சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும். இதில் எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை என்று காபந்து அரசின் தகவல் தொலைத் தொடர்பு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வர்த்தக சமூகத்தினரைச் சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்ட உறுதி மொழியை வர்த்தக சமூகத்தினருக்கு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வழங்கியுள்ளார்.

சமாதானம், வினைத்திறன் மிக்க நிர்வாகம், சட்டம், ஒழுங்கு தேர்தல் முறைச் சீர்திருத்தங்கள், பொருளாதார அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைகள் தொடர்பாக வர்த்த சமூகத்தினருக்கு விளக்கம் கொடுக்கும் வகையில் நேற்று வர்த்தக சமூகத்தினருடனான கலந்துரையாடல் ஒன்றை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நடத்தினார்.

பண்டரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற இக் கலந்துரையாடலில் அவர் மேலும் கூறியதாவது;

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியானது நவீன யுகத்திற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ள ஓர் அமைப்பாகும். தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் மற்றும் தரப்பினருடனும் சமாதானப் பேச்சுவார்த்

(12ம் பக்கம் பார்க்க)

# சிவராத்திரியை முன்னிட்டு ஓமந்தை வீதி திறந்திருக்கும்

(கொழும்பு)

மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு மன்னார் திருக்கேதீஸ்வரம் செல்லும் பக்தர்களின் வசதி கருதி உயிலங்குளம், ஓமந்தை, மடுவீதிச் சந்தி என்பன 17ம் திகதியில் இருந்து நாளை வரை 24மணி நேரமும் திறந்திருக்குமென பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இத்தினத்தில் முகமாலையூடாக இரவு 9.00மணி வரை போக்குவரத்தை

(12ம் பக்கம் பார்க்க)

## விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிக்கையில் 2004.01.16ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகுதிIV (அ) பிரசுரிக்கப்பட்ட, வடக்கு கிழக்கு மாகாண அரசாங்க சேவையில் உள்ளூராட்சித் திணைக்கள வருமானப் பரிசோதகர் வகுப்பு II, வடக்கு கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள தையல் போதனாசிரியர் வகுப்பு II ஆகிய பதவிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதியானது 2004.02.16 என குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் விண்ணப்ப முடிவுத் திகதி 15.03.2004 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

வே.பொ.பாலசிங்கம்,
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு கிழக்கு மாகாணம்.

(C/7275)


## சிவராத்திரி நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய சிவராத்திரி விழா விசேட பூசை இன்று மாலை நடைபெறவுள்ளது.

தொடர்ந்து மாணவர்களின் நிகழ்ச்சிகள், பரிசில் வழங்கல், பட்டிமன்றம் என்பனவும் இடம்பெற வுள்ளது. (ச-83)

★ ★ ★

(கல்வயல்)

அரியாலை பிரப்பங்குளம் மகா மாரியம்மன் ஆலயத்தின் மகா சிவராத்திரி விழா விசேட பூசை கள் இன்று மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 4 சாமப் பூசைகளும் கலை நிகழ் வுகளும் நடைபெறவுள்ளது. (ச-36)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

தென்கோவை பழைய வீதி ஸ்ரீ சாந்திலிங்கப் பெருமான் திருக் கோவில் பாற்குட வைபவமும் மகா சிவராத்திரி விழாவும் இன்று நடைபெறவுள்ளது.

இன்று காலை 7மணிக்கு பாற் குட வைபவம் இடம்பெற்று தொட ர்ந்து பாலாபிஷேகமும், அதீனைத் தொடர்ந்து பி.ப. 6.30 மணிக்கு சிவராத்திரி நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது. (ச-43)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினத்தையொட்டி துன்னாலை தெற்கு ஸ்ரீ பூதேஸ் வரர் சிவன்தேவஸ்தானத்தில் இன்று நான்குசாமப் பூசைகள் உட்பட விசேட அபிஷேக ஆராதனைகளும் இடம்பெறவுள்ளன. (தி-18)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஈழத்துச் சிவன் கோவிலில் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு மாணிக்கவாசகர் அன்ன தான சபையின் ஆதரவுடன் இன்று புதன்கிழமை இரவு திருவாசகம் முற்றோதலும், நாளை வியாழக் கிழமை 6 மணிக்கு மகேஸ்வர பூசையும் நடைபெறவுள்ளது.(தி)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞானவைரவ சுவாமி ஆலய மகா சிவராத்திரி விழா இன்று புதன்கிழமை நடை பெறவுள்ளது.

அத்துடன்; ஆலயத் தொண டர் சபையினால் நடாத்தப்பட்ட சைவசமயப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அன்றைய தினம் பரிசுகளும் வழங்கப்படவுள் ளன. (தி)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ். மடம் வீதியில் உள்ள திருவளுவர் சனசமூக நிலையம் நடாத்தும் மகா சிவராத்திரி விழா இன்று புதன்கிழமை மாலை 6மணிக்கு மேற்படி சனசமூக நிலைய கலையரங்கில் சி.கி. நவரட்ணம் தலைமையில் நடை பெறவுள்ளது. (தி)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

கோப்பாய், கரந்தன் நீர்வேலி உரும்பிராய் கிழக்கு அருள்மிகு மனோன்மணி சமேத சிவபூதநா தேஸ்வரர் ஆலயத்தின் மகாசிவ ராத்திரி தினத்தையொட்டி இன்று விசேட அபிஷேக ஆராதனை யுடன் கூடிய நான்கு ஜாமப் பூசை கள் இடம்பெறவுள்ளன.

அத்துடன், சமயக் கலைநிகழ் வுகளும் இடம்பெற ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது. (இ)


## தனியார் பாதுகாப்புச் சேவை

### போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்

01.04.2004 தொடக்கம் 31.03.2005 வரையான காலப் பகுதிக்கு தனியார் பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கு பின்வரும் தகுதியுடையோரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் மீளளிக்கப்படாத ரூபா 250/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 02.03.2004 காலை 10.00மணி வரைக்கும்.

கேள்விகள் உடனே திறக்கப்படும். அத்திகதிக்குப் பின்னர் வரும் கேள்விப்பத்திரங்களும், தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்காத கேள்விப் பத்திரங்களும் நிராகரிக்கப்படும்.

01) அண்மையில் பாதுகாப்பு அமைச்சில் பெறப்பட்ட பாதுகாப்புச் சேவை அனுமதிச் சான்றிதழ்.
02) சேவை முன்னனுபவம்.
03) நிதி நிலைமைத் தகைமை. (6 மாத கால வங்கிப்பற்றும், வருமான வரிப் பற்றுச்சீட்டும்)

மேலதிக விபரங்களை வைத்தியசாலையில் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர்
வைத்திய கலாநிதி எஸ்.சதுர்முகம்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

(சி-7276)


## தென்பகுதி மக்களுக்கு 325 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

தென்பகுதியில் வரட்சியினால் பாதிக்கப்பட்ட 6 மாவட்டங்களிலும் உள்ள மக்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்கு 325 மில் லியன் ரூபா நிதி திறைசேரியினால் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிதியைப் பயன்படுத்தி சமூக சேவைகள் நலன்புரி அமைச் சினால இவ்வார இறுதியில் மாவட் டச் செயலாளர் மற்றும் அந்தந் தப் பிரதேச அலுவலகங்கள் ஆகி யவற்றின் ஊடாக இவ் உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட வுள்ளது.

இதனடிப்படையில் குருநாகல் அநுராதபுரம், புத்தளம், அம்பாந் தோட்டை, மொனராகல மற்றும் பொலநறுவை ஆகிய மாவட்டங் களில் வரட்சியினால் பாதிக்கப் பட்ட சுமார் 2இலட்சத்து 10 ஆயி ரம்பேர் இந்நிதிமூலம் பயனடைய வுள்ளனர். (தி-18)

### நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு உதய தாரகை சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நிலைய முன் றலில் நடைபெற்றது.

நிலையத்தின் நடப்பு வருடத் தலைவராக தெ.பிரசாத், செய லாளராக கு.விஜயேந்திரன், பொரு ளாளராக சீ.ரஞ்சித் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (இ)

## மரத்தால் விழுந்து குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

பனைமரத்தில் ஏறிய குடும்பஸ் தர் ஒருவர் நிலை தடுமாறி மரத் திலிருந்து கீழே விழுந்ததில் ஸ்த லத்திலேயே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் நண்பகல் வல்லிபுரக் குறிச்சிப் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் சிங்கநகரைச் சேர்ந்த 6 பிள்ளை களின் தந்தையான விநாசித்தம்பி இராமச்சந்திரா (வயது-63) என்ப வரே உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் வைத்திய பரி சோதனைகளுக்காக மந்திகை அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (தி-18)


சங்குநாதம்




★ ஐ.தே.முன்னணி வெற்றி பெற்றால் ஜனாதிபதி இராஜினாமா செய்வாரா? விதுரன்

★ ஸ்ரீ.சு.கட்சி - ஜே.வி.பி. கூட்டுக்குள் குழப்பம் கோவையூர் ஜெயன்

★ தேர்தல்களம் போகிறார் பாரீர் டொறிங்ரன்

வாழ்வை வளம்படுத்த துரைமுருகர் எழுதும் என் சோதிடம்

கே.வி.குணசேகரம் எழுதும் கல்தூண்கள் (தொடர்கதை)

வியாசரின் பதில்கள்

சினிமாச் சிதறல்

மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்

வெள்ளி வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்

விலை ரூபா. 16.00

## சிறு விளம்பரம்

### விற்பனை

பழைய பூங்கா வீதியில் மறவ குளத்துக்கு மேற்காக 5பரப்புக்காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு எஸ். மாசிலாமணி 22, மூளாய் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.(8263)


## குழந்தை பராமரிப்பு கலந்துரையாடல்

(சுதுமலை)

ஆரம்ப குழந்தை பராமரிப்புத் தொடர்பான 3 நாள் கலந்துரையாடலொன்று நாளை வியாழக்கிழமை முதல் சாவல்கட்டு நூறு வீட்டுத் திட்ட கடற்றொழிலாளர் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.கணேஸ்வரராஜா தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி கலந்துரையாடலில் மானிப்பாய், சுதுமலை, நவாலி மற்றும் ஆனைக்கோட்டை, சாவல்கட்டைச் சேர்ந்த சுகாதாரத் தொண்டர்களும், தாய்மார்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நாளை வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ள ஆரம்ப குழந்தை பராமரிப்புத் தொடர்பான இக்கலந்துரையாடலில், மேலதிக உணவை சிறுவர்களுக்குக் கொடுப்பதன் முக்கியத்துவம் மற்றும் இது தொடர்பான செய்முறை விளக்கங்கள் ஆகியன பற்றிவிரிவாக எடுத்துக் கூறப்படவுள்ளது. (தி-252)

## நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூா முருகன் சனசமூக நிலையத்தில் அண்மையில் இடம் பெற்ற ஆண்டுப் பொதுக் கூட்டத்தின போது இவ்வாண்டுக்கான புதிய நிர்வாகசபையொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் புதிய தலைவராக க.குமாரசுவாமி, உப - தலைவர்களாக ந.சோமசுந்தரம் மற்றும் எஸ்.தனபாலசிங்கம், செயலாளராக யே.நிரோஷானந், உதவிச் செயலாளராக வ.குமாரராஜா, பொருளாளராக க.லோகானந்தம் ஆகியோா தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், செயற் குழுவொன்றும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. (தி-18)

# சிவனை நோக்கித் தவம் புரிந்து சிறப்படையும் சிவராத்திரி விரதம்

சிவனைக்குறித்து அனுட்டிக்கப்படும் விரதங்களில் பிரதோஷ விரதம் மாதத்தில் இருதடவை வரும் சிவராத்திரி விரதம் மாதந்தோறும் வந்தாலும் மாசிமாதத்தில் கிருஷ்ணபட்சத்துச் சதுர்த்தித் திதியன்று அமாவாசைக்கு முதல் நாள் சிவராத்திரி கொண்டாடப்படுகின்றது.


அன்று சிவபெருமானை வழிபடுவோருக்கு எல்லா நலன்களும்கிட்டும் இது பற்றிப பல புராணக் கதைகள் உள்ளன. உமாதேவியார் விளையாட்டாக சிவபெருமான் கண்களைத் தன் திருக்கைகளினால் மூட உலகமெல்லாம் இருள் சூழ்நத அந்நாளே சிவராத்திரி என்கினறனர்.

அந்த இரவில் ஒளிவேண்டித் தவித்த தேவர்களுக்காக சிவன் நெற்றிக் கண்ணைத் திறந்ததும் உமாதேவி பயந்து நடுங்கி எடுத்து விட்டார். தேவியின் பயத்தினைப் போக்க சிவன் நெருப்பு ஒளியினை குளிர் நிலவாக மாற்றி அம்பிகையை ஆட்கொண்டார் .பாற்கடலில் விளைந்த அமுதத்தினை உலகைக் காப்பதற்காகச் சிவபெருமான் உண்ணவே பெருமானுக்கு நஞ்சு ஏதும் கேடு விளைவிக்குமோ என்று அஞ்சி தேவாகள் இரவுமுழுவதும் விழித்து இருந்தநாளே சிவராத்திரி என்பர்.

பிரம்மனும் திருமாலும் தங்களுள் யார் பெரியவர் என்று போரிட அதனால் ஆணவ இருள் உலகைச் சூழ்ந்ததாகவும் அந்த இருளினைக் கண்டு விண்ணிலுள்ள தேவர்கள் அஞ்சவே அவர்களைக் காக்க சிவபெருமான் இலிங்கமாக முளைத்து சுடர்விட்டு அனைவருக்கும் அறிவூட்டிய நாளே சிவன் இராத்திரி என்றும் கூறுவர்.

### சிவராத்திரியின் மகிமை

சிவராத்திரி மகிமை பற்றி ஒரு புராணக்கதை உண்டு. ஒருமுறை ஒருவேடுவனை புலி ஒன்று துரத்தவே அவ்வேடுவன் அஞ்சி நடுங்கியவாறு ஒரு வில்வ மரத்தின் மீது ஏறிக்கொண்டான். புலியும் மரத்தடியிலேயே படுத்து வேடுவன் கீழே இறங்கட்டும் என புலி காத்திருப்



பதைக் கண்டவேடுவன இரவில் தூங்கிக் கீழே விழுந்தால் புலிக்கு இரையாகி விடுவேனென அஞ்சினான். தூக்கம் வராமலிருக்க தான் இருந்த மரத்தின் இலைகளை ஒவ்வொன்றாக பறித்து கீழே போடலானான். அந்த வில்வ மரத்தின் இலைகள் மரத்தினடியில் இருந்த லிங்கத்தின் மேல் அர்ச்சனை செய்ததுபோல் இரவு முழுவதும் தொடர்ந்து விழுந்து கொண்டே இருந்தது.

அன்றையதினம் சிவராத்திரி. அந்த வேடுவன் இரவெல்லாம் கண் விழித்து அறிந்தோ அறியாமலோ செய்த சிவ பூஜை காரணமாக அவனுக்கு மோட்சம் கிடைத்தது. சிவபெருமான் அந்த வேடுவன் முன்னால் காட்சியளித்தார். வேடுவன்,மீது கருணை கொண்டு அவனது பாவங்களை நீக்கி முத்தி அளித்தார்.

சிவராத்திரி முழுவதும் தூங்காமல் இருந்து சிவபெருமானை வணங்குவர். இரவில் நான்குகால பூஜை அமைத்து சிறப்பாக வழிபட வேண்டும். இதே போல் திருமாலை இரவுமுழுவதும தூங்காது இருந்து பூஜை செய்வதனை வைகுண்ட ஏகாதசி என்பா. இது மார்கழி மாதத்தில் அனுட்டிக்கப்படும். சிவராத்திரி, நவராத்திரி என்னும் இருபண்டிகைகள் மட்டுமே ராத்திரி என்னும் அடைமொழியில் உள்ளன. இதில் ஒன்று சிவனுக்கும மற்றது சக்திக்கும் உரியதாகும்.

### முறையாக அனுட்டிக்கப்பட வேண்டிய விரதம்

சிவனுக்குரிய இச்சிவராத்திரி விரதம் முறையாக அனுட்டிக்கப்படவேண்டிய மகிமைமிக்க விரதமாகும். இந்தவிரதம் வேடிக்கையாகவோ அல்லது விளையாட்டாகவோ அனுட்டிக்கப்படலாகாது. சிவபெருமானின் திருவருட் பெருங்கருணைத் திறத்தை மனதிலே நினைந்து தியானித்து பக்தியுடன் ஸ்நானஞ் செய்து ஆலயவழிபாட்டுடன் விரதத்தை ஆரம்பிக்கலாம்.

மகா சிவராத்திரி தினத்தின் முன்தினமான திரயோதசி தினத்தன்று ஒரு வேளை பகல் உணவு உண்டு மறுநாள் முழுவதும் உபவாசமிருந்து சிவராத்திரியன்று நித்திரை செய்யாமல் கண் விழித்திருக்க வேண்டும். சினிமாப்படம் பார்த்தோ அல்லது வேறு கேளிக்கைகளில் ஈடுபட்டோ இந்த விரதம் அனுட்டிக்கப்படலாகாது .அது குளிக்கப் போய சேறு பு,சியதாக அமையலாம்.

நான்கு சாமமும் சிவாலயதரிசனம் செய்து பெரிய புராணம், சிவராத்திரி புராணம் ,கந்த புராணம் ,சிவபுராணம் முதலியவற்றைப் படித்தலும் கேட்டலும் நல்லது. தேவார திருவாசகங்கள் ஓதி பஜனை கூட்டுப் பிரார்த்தனைகளிலும் ஈடுபடலாம். சைவப் பிரசங்கங்கள், சொற்பொழிவு, சிவகதை முதலானவற்றை கேட்கலாம் சைவ மக்கள் மட்டு மல்ல வைஷ்ணவர்களும் இவ்விரதம் இருக்க வேண்டும் என கருட புராணம் கூறுகின்றது.

இந்தச் சிறந்த சிவராத்திரி விரதத்தினை நல்ல முறையில் அனுஷ்டித்து மறுநாள் இயன்ற வரை மற்றவர்களுக்கும் உணவளித்து விதிப்படி நெறி முறை தவறாது வாழவேண்டும். அதுவே யாம் இறைவனுக்குச் செய்யும் சிவதொண்டாகும்.□

**க.சிவசங்கரநாதன்**

# தமிழ்க்கட்சிகளைச் சேர்க்க வேண்டாம் சிஹல உறுமயக் கட்சி கோரிக்கை

(கொழும்பு)

தமிழ்க் கட்சிகளின் ஆதரவை நாடுவது பௌத்த சிங்கள சமூகத்திற்கு எதிரானது. இதனால், எதுவித அரசியல் காரணங்களுக்காகவும் தமிழ்க்கட்சிகள் எதனையும் கூட்டுச்சேர்க்கவோ அல்லது அவர்களது ஆசனங்களைப் பகிர்ந்து கொள்ளவோ முக்கிய இரு சிங்களக் கட்சிகளும் எதுவித காரணத்தைக் கொண்டு முன்வரக் கூடாது என சிஹல உறுமய எழுத்து மூலம் ஜனாதிபதியையும் பிரதமரையும் கேட்டுக்கொண்டுள்ளது.

இம்முறை தேர்தலில் இரு பிரதான சிங்களக் கட்சிகளும் பாராளுமன்றப் பெரும்பான்மைப் பலம் கிடைக்காமல் போகும் வாய்ப்பு உருவாகியுள்ளது. இதனைப் பயன்படுத்தி தமிழ்க் கட்சிகள் தங்களது ஆதரவைத் தமிழர் தரப்புப் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வரும் கட்சிகளுக்கு வழங்க முன்வந்தாலும், அத்தகைய ஆதரவை இரு பிரதான கட்சிகளும் நிராகரிக்க வேண்டியது தேசியக் கடமை என்றும், அப்படி அவர்களது ஆதரவைப் பயன்படுத்துவது பௌத்த சிங்கள சமூகத்திற்குப் பேராபத்தை உருவாக்கும் என்றும் சிஹல உறுமய சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், தமிழ்க் கட்சிகள் விடுதலைப் புலிகளை ஆதரிப்பதனால், தமிழ்க் கட்சிகளின் ஆதரவைப் பெறுவது தமிழர்களுக்கு தனிநாடு அமைவதற்கு வாய்ப்பளிப்பதாக மாறிவிடும் என்றும், இதனைத் தவிர்க்க இரண்டு பிரதான கட்சிகளும், அனைத்துச் சிங்கள சிறு கட்சிகளையும் இணைத்துக்கொண்டு கூட்டாட்சி அமைப்பது அவசியம் என்றும் சிஹல உறுமய மேலும் கருத்துககளை முன்வைத்துள்ளது. (தி-18)

# கற்பித்தல் உபகரணப் போட்டி முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்ட மட்ட ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கான கற்பித்தல் உபகரணப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப்போட்டியில் வலய மட்டத்தில் முதல் 10 இடங்களையும் பெற்றோர் விபரம் பின்வருமாறு:-

திருமதி எஸ்.இராஜரட்ணம் - புனித சாள்ஸ் மகா வித்தி., செல்வி ஆர்.சவரிமுத்து - புனித மரியாள் வித்தி., செல்வி எம். மாலினி - புனித மரியாள் வித்தி., திருமதி விமலதாசன் - புனித மரியாள் வித்தி., திருமதி எல்.பெனடிற் - புனித மரியாள் வித்தி., திருமதி எம்.பி.ஏ.கனிசியல சென்றோக்ஸ் றோ.க.வித்தி., திருமதி எஸ். நாகேஸ்வரன் - துரையப்பா வித்தி., திருமதி டி.பாலசுப்பிரமணி யம் பாசையூர் அன்ரனீஸ், திருமதி ஜே.யோகலிங்கம் - நாவாந்துறை றோ.க., திருமதி இ.சூரியகுமார் - கொழும்புத்துறை இந்துமகா வித்தி.

(தி-3)

## சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

521 படையணிக்கு உட்பட்ட தனங்களப்புப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆலயங்களில் சிவராத்திரி விழாப் பூஜைகள் இன்று காலை 8மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறவுள்ளன.

தோப்பூர் பிள்ளையார் கோவில, கைதடி முருகன் கோவில், கைதடி வள்ளியம்மன் கோவில் ஆகிய ஆலயங்களிலேயே சிவராத்திரிப் பூஜைகள் நடைபெறவுள்ளன.

இப்பூஜைகளில் பொதுமக்கள் கலந்துகொள்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (தி)

# பெயரையும் சின்னத்தையும் மாற்றி சிஹல உறுமய தேர்தலில் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலில் சிஹல உறுமய அதன் பெயரையும் சின்னத்தையும் மாற்றி 'ஜாதிக்க ஹெல உறுமய' என்ற பெயரில் சங்கு சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளது.

இதற்கான அனுமதியைத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ்ஸநாயக்க வழங்கியுள்ளதாகவும், எதிர்வரும் தேர்தலில் இதன் பிரகாரமே போட்டியிடவுள்ளதாகவும் சிஹல உறுமயக் கட்சியின் பிரசாரச் செயலாளர் உதய கமன்பில அறிவித்துள்ளார்.

தேர்தலுக்காக தமது கட்சியின் நிலைப்பாடுகள் குறித்து அவர் கருத்துத் வெளியிடுகையில்,

எமது கட்சி போட்டியிடவுள்ள அனைத்து மாவட்டங்கள் மற்றும் வேட்பாளர்கள் தொடர்பான விபரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. களுத்துறை மாவட்டப் பிரதான வேட்பாளராகக் கட்சியின் தலைவர் திலக்கருணாரட்ணவும், கொழும்பு மாவட்டப் பிரதான வேட்பாளராகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்கவும், கண்டி மாவட்டப் பிரதான வேட்பாளராக உடவத்த ஆனந்த தேரரும் போட்டியிடவுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார். (தி-18)

# திகாமடுல்ல மாவட்ட உள்ளூராட்சி தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

திகாமடுல்ல மாவட்டத்தில் உள்ள 7உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை ஒத்திவைப்பதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸ்ஸ நாயக்கா நேற்று உயர் நீதிமன்றில் அறிவித்துள்ளாா.

திகாமடுல்ல மாவட்டத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை இடைநிறுத்துமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றம் நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட போதே தேர்தல் ஆணையாளர் மேற்படி தகவலை உயர் நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு 2இலட்சத்து 17ஆயிரம் வாக்காளர் அட்டைகளை விநியோகிக்க வேண்டி யிருப் பதாகக் குறிப்பிட்ட தேர்தல் ஆணை யாளர் அதற்குப் போதியகால அவகாசம் இல்லாமையினால் இம் மாவட்டத்திற்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டியிருப்பதாகவும் உயர் நீதி மன்றில் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இம்மாவட்டத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதாக இருந்தால், 2002 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்புக்கு அமைய வாக்கெடுப்பு நடத்துவதற்குரிய வாய்ப்புக்கள் இருக்கின்றனவா? என்பது குறித்து உடன் அறிவிக்கவேண்டும் என கடந்த வெள்ளிக்கிழமையன்று உயர்நீதிமன்றம் தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தி-61,10)

# அரசியல் குழப்பத்தால் எதுவித பயனுமில்லை

**வவு. மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு**

இன்று தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழலானது குழப்பநிலையில் உள்ளது. இதனை நாம் பார்த்துக்கொண்டிருப்பதால் எதுவிதமான பயனும் இல்லை. எனவே, எமது மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் விழுமியங்களையும் பாதுகாப்பது மிகவும் முக்கியமானதொன்று. இதற்காக சர்வதேச நாடுகளுடனும் பெண்கள் அமைப்புடனும் இணைந்து செயற்படுவது காலத்தின் தேவை.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அலை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வவுனியா பெரிய பூவரசன் குளத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அலை இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினைக் கோயில்குளம் பொறுப்பாளர் தமிழ்மாறன் ஏற்றி வைத்தார். வவுனியா மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் தலைவர் எஸ்.என்.ஜி.நாதன், வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோரும் சிறப்புரையாற்றினர். (தி-64,8)

# பிரதமரின் நிலையை உணராது அவருடன் ஹக்கீம் ஒட்டுகிறார்

## முன்னாள் எம்.பி.ஹிஸ்புல்லா கிண்டல்

(கொழும்பு)

**முஸ்லிம் மக்களின் நலன்களை கருத்தில் கொள்ளாது அவர்களை ஓரங்கட்டும் வகையில் செயற்பட்டு வந்த ஐக்கிய தேசிய முன்னணியுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித்தலைவர் ரவூப்ஹக்கீமை முஸ்லிம் மக்கள் விரைவில் ஓரங்கட்டிவிடுவார்கள். இவ்வாறு தேசிய ஐக்கிய முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எல்.ஏ.ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.**

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தினால் தொடர்ச்சியாக நடாத்தப்பட்டுவரும் 'விடியும் வேளை' நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின ஊடக செயலகத்தில் கடமையாற்றும் ஏ.ஐ.எம்.கலீலும் கலந்துகொண்டு தனது கருத்துக்களைத் தெரிவித்தார்.

நிகழ்வில் கலந்துகொண்டு ஹிஸ்புல்லா கருத்துத் தெரிவிக்கையில்,

முஸ்லிம்க்ளின் பிரச்சினைகளை ஒருமித்த குரலில் அரசுக்கு எடுத்துக்கூறி தீர்வு காண்பதற்காகவும் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவர்கள் சுதந்திரமாகவும், சுயநிர்ணய உரிமையுடனும் வாழ்வதற்கு சகல முஸ்லிம் கட்சிகளும் ஒன்றுபட்டு எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடவேண்டும். இதனை மதிப்புக்குரிய முஸ்லிம் காங்கிரஸ் கட்சித்தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப்ஹக்கீமிடம் பல முறை எடுத்துக்கூறினோம்.

### ஹக்கீமின்விடாப்பிடி

ஆனால், ஹக்கீமோ 'ஐக்கிய தேசிய முன்னணியைவிட்டு வெளியே வரமாட்டேன்' 'எமது கட்சி ஐக்கியதேசிய முன்னணியைவிட்டு வெளியேறினால, தேர்தலில் முன்னணி அதிக வாக்குகளை பெறும் சந்தர்ப்பத்தை இழந்துவிடும். இதனால் பொது ஜன ஐக்கிய முன்னணி மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறிவிடும்' என பகிரங்கமாக எம்மிடம் ஏன் மக்கள் மத்தியில் கூட கூறிவருகிறார்.

ஐக்கியதேசிய முன்னணி ஆட்சிக்காலத்தில் முஸ்லிம் மக்கள் எந்தவித நன்மையும் பெற்றுக்கொள்ளவில்லை. முஸ்லிம்களை மூன்றாம் தரப்பாக சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள ஐக்கியதேசிய முன்னணி அனுமதிக்கவில்லை.

இதையெல்லாம் அறிந்துகொண்டும்கூட முன்னணியுடன் ஒட்டிக்கொண்டு 'நான் ஐக்கியதேசிய முன்னணியை விட்டு வரமாட்டேன், வரமாட்டேன்' என அடம்பிடிப்பது வேடிக்கையானது.

வேடிககை மட்டுமல்ல, விசனத்தனமான செயலுமாகும்.அத்துடன் ஐக்கியதேசிய முன்னணியுடன் கட்டிப்பிடித்துக்கொண்டிருப்பதற்கு காரணம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவாகத்தான் இருக்கும் என நான் நினைக்கின்றேன்.

ஏனெனில் முஸ்லிம் கட்சிகளிடம் பிளவை ஏற்படுத்துவதற்காக ஹக்கீமுக்கும் அதாவுல்லாவுக்கும் அமைச்சர் பதவிகளைக் கொடுத்து தம்வசம் வைத்திருந்தவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே.

### மதில்மேல் பூனை

இதனால் அமைச்சர் பதவிகளைப் பெற்ற ஹக்கீமும், அதாவுல்லாவும், ஐக்கியதேசிய முன்னணி அரசுக்கு எதிராக செயற்படமுடியாதிருந்தார்கள்.

அத்துடன் இதனால் முஸ்லிம் மக்களுக்கும் அரசினால் இழைக்கபபடுகின்ற அநீதிகளை எடுத்துக்கூற முடியாதநிலையும் ஏற்பட்டிருந்தது.

அதுமட்டுமன்றி, அரசின் அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுத்து வந்த தேசிய ஐக்கியமுன்னணி உள்ளிட்ட முஸ்லிம் கட்சிகளுடன் நல்லுறவை வளர்த்துக்கொள்ளமுடியாதநிலையும் ஏற்பட்டது.

எது எவ்வாறாயினும் ஹக்கீம் முஸ்லிம் மக்களுக்காக அவர்களின் உரிமைக்காக குரல்கொடுக்கவில்லை. இதனால் அவர் மீது முஸ்லிம் மக்கள் வெறுப்படையப் போகிறார்கள் என்பதைத்தான் நான் இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

ஐக்கியதேசிய முன்னணி அரசு தற்போது அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருக்கின்ற நிலையில்கூட அவர் முன்னணியைவிட்டு வெளியேற மறுக்கிறார் என்றால் இதில் ஏதோ மர்மம் இருக்கின்றது என்றுதான் கூறவேண்டும்.

### கிளிப்பிள்ளை

எல்லாவற்றிற்கும் ஐக்கியதேசிய முன்னணிதான் காரணம் என கூறிவிடமுடியாது. ஹக்கீம் என்ன குழந்தைப்பிள்ளையா? இல்லை தன்னைத்தானே நடத்தக்கூடிய வல்லமை படைத்தவர் அவருக்கும் சுயமாகச் சிந்தித்து செயல்படக்கூடிய ஆற்றல் இருக்கின்றது.

அந்தரத்தில் தொங்கும் ஐககியதேசிய முன்னணியுடன் தானும் தொங்குவது முஸ்லிம சமூகத்தை முற்றாக அழிப்பதற்காகவா? எனறு கூட சிலர் கேள்வி கேட்கின்றார்கள்.

நடநததைபற்றி இனி யோசித்து பிரயோசனம் இல்லை. நடக்கப்போகின்றதையாவது யோசிக்கின்றாரா?

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள ஐக்கியதேசிய முன்னணி, அதிக வாக்குகளைப் பெற் போவதில்லை என்பதை அறிந்தும்கூட அவர் அதனை கட்டிப்பிடித்துக்கொண்டிருக்கிறாரே.

இவரது இத்தகைய செயற்பாடு எமக்கு மிகுந்த கவலையைத் தருகின்றது. எமக்கு மட்டுமல்ல மக்கள்கூட ஹக்கீமின் பிடிவாதத்தைக்கண்டு கவலை அடைகின்றார்கள்.

இதற்கிடையில முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்துகொள்ள மறுக்கும் ஹக்கீம், 'தேசிய ஐக்கிய முன்னணி ஜே.வி.பி. ஸ்ரீலங்கா சுதந்திரக்கடசி இணைந்து செய்துள்ள கூட்டமைப்புடனும், பொதுஜன ஐககிய முன்னணியுடனும் வால்பிடித்துக்கொண்டு இருக்கின்றதாகவும் கூறி எம்மை கடுமையாக விமர்சித்து வருகின்றார்.

ஜே.வி.பி.இனவாதக் கட்சியாக இருந்தாலும், தற்போது ஜனநாயகத்தில் இறங்கி முஸ்லிம் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதாக எம்மிடம் உறுதியளித்திருக்கின்றது.

### பிரச்சினைக்கு தீர்வு அவசியம்

அதேபோன்று பொதுஜன ஐக்கிய முன்னணியும், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும் என்பதில் மிக ஆர்வமாக இருக்கின்றது.

எமக்கு யார் ஆட்சிக்கு வந்தாலும், எமது மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் சரி.

அது பொதுஜன ஐக்கியமுன்னணியாக இருந்தாலும்சரி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாக இருந்தாலும்சரி ஏன் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்தாலும்கூட முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாக எமக்கு உரிய முறையில் உறுதிமொழி வழங்குவதாக இருந்தால், ஐக்கியதேசிய முன்னணிக்கு எமது பூரண ஆதரவை வழங்குவோம்.

எமது மக்களுக்காக நாம் எதையும் செய்வோம். இதுதான் எமது நிலைப்பாடு.

எனவே மதிப்புக்குரிய முன்னாள் அமைசசரும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சித்தலைவருமான 'ரவூப்ஹக்கீம், முஸ்லிம் மக்களின் நலன்களைக் கருத்தில்கொண்டு முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்துகொண்டு எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடவேண்டும்.

தேர்தலில் முஸ்லிம் கட்சிகளின் கூட்டமைப்பு வெற்றிபெற்ற பின்னர் கட்சிகளிடையே நிலவிவரும் முரண்பாடுகளை களைந்துகொள்ளலாம்.

### ஓரங்கட்ட விரும்பவில்லை

இதேசமயம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை நாம் ஒதுக்கிவிட்டு, முஸ்லிம் கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கும் நாம் விரும்பவில்லை.

ஏனெனில் சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் சமூகம் மூன்றாம் தரப்பாக கலந்துகொள்ள வேண்டும் என்று கோரி முஸ்லிம மக்களையும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவர வேண்டும் என்பதிலும் அவர் விடாப்பிடியாக இருந்தவர். என்பது எமக்கு நன்கு தெரியும்.

எனவே நான் மீண்டும் மீண்டும் ஹக்கீமுக்கு கூறவிரும்புவது என்னவென்றால, முஸ்லிம் மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டாவது முஸ்லிம் கட்சிகளுடன் இணைந்து செயற்படவேண்டும் என்றார்.

இதேசமயம், இந்நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதியின் ஊடக செயலகத்தில் கடமையாற்றிவரும் ஏ.ஐ.என்.கலீல் ஜனாதிபதி சாவாதிகாரப் போக்கில் செயற்பட்டு வருவதாக ஊடகங்களில் வெளியாகும செய்திகள் குறித்து தனது கண்டனத்தைத் தெரிவித்தார்.

### சர்வாதிகாரம்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு சகல அதிகாரங்களையும் பெற்றக்கொடுத்தது இலங்கை அரசியல் யாப்பே.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சர்வாதிகாரப் போக்குடன் தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி செயற்பட்டுக்கொண்டிருக்கிறார் என்ற குற்றச்சாட்டுக்களை பல அரசியல்வாதிகள் ஊடகங்கள் மூலமாக வெளியிட்டு வருகின்றார்கள்.

உண்மையிலேயே இந்த அரசியல் வாதிகளுக்கு 'சர்வாதிகாரத்திற்கும் சர்வ அதிகாரத்திற்கும' இடையேயுள்ள வித்தியாசம என்னவென்று தெரியாது. இதனால் தான் அவர்கள் ஜனாதிபதியை சர்வாதிகாரி எனக் கூறிவருகின்றார்கள்.

இந்த நாட்டிலே ஜனாதிபதி சர்வாதிகாரி ஆகின்றார் என்றால், அதற்கு ஏதாவது ஒரு அரசியல் அமைப்பு வழிவகுத்துக் கொடுக்கவேண்டும். இந்த சந்தர்ப்பத்திலே எமது நாட்டின் அரசியல் யாப்புப் பற்றி சிந்தித்துப் பார்க்கும்போது 1977ஆம் ஆண்டு பதவிக்குவந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினால் உருவாக்கபபட்ட புதிய அரசியல் யாப்புச் சட்டம், இந்நாட்டினை ஜனநாயகத்தில் இருந்து தடம்புரட்டி திசைதிருப்பி சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்வதற்கு மேற்கொள்ளபபட்ட ஒரு மறைமுகமான பாரிய முயற்சி என்றே கூறவேண்டும்.

பாராளுமன்ற அங்கத்தவர்களிடம் வெள்ளைத்தாளில் கையொப்பத்தைப் பெற்றுக்கொண்டு தான் நினைத்ததை வேண்டிய நேரங்களில் செய்யக்கூடியவாறு இந்த அரசியல் யாப்பு அமைந்திருக்கின்றது.

இதன்மூலம் ஜனநாயகத்தின் கழுத்து நெரிக்கப்பட்டிருப்பதை பாராளுமனற பிரதிநிதிகள் உணர்ந்திருப்பார்கள்.

இதனால்தான் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆரம்பத்தில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் போது இத்தகைய அரசியல் யாப்பு முறறாக ஒழிக்கப்படவேண்டும். பதிலாக புதிதாக அரசியல் யாப்பு உருவாக்கப்படவேண்டும் என்று கூறிவந்தார்.

எனவே ஜனாதிபதிக்கு சகல அதிகாரங்களையும் பெற்றுக்கொடுத்தது இலங்கை அரசியல் யாப்பே என்பதை இங்கு நான் சுட்டிக்காட்டுவதுடன் ஜனாதிபதி தனக்குள்ள அதிகாரங்களை பயன்படுத்தியே கடந்த 7ஆம் திகதி பாராளுமன்றக் கலைத்துள்ளார். அவர் சர்வாதிகாரப் போக்குடன் நடந்துகொள்ளவில்லை.

அத்துடன் இத்தகைய கறைபடிந்த அரசியல் யாப்பை ஒழித்துவிட்டு புதிய அரசியல் யாப்பை தயாரித்து நாட்டின் நீண்டகாலப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணபபடவேண்டும் என்றார்.

(தி-60,10)

# போஷாக்குமட்ட மேம்பாட்டுக்கு ஆணையாளர் நன்கொடை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கர்ப்பிணித் தாய்மாரின் போஷாக்கு மட்டத்தினை மேம்படுத்தும் வகையிலான திட்டங்களை முன்னெடுக்கவென உளளூராட்சி ஆணையாளரினால் மூலதன நன்கொடையாக 57ஆயிரத்து 63ரூபா நிதியுதவி யாழ்.மாநகரசபை வைத்திய பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதியைப் பயன்படுத்தி, யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட 9 சுகாதார நிலையங்கள் ஊடாக கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கு தலா ஒரு கிலோகிராம் வீதம் ஜீவாகாரம் வழங்கப்படவுள்ளது.

அத்துடன், இந்நிதியின் எஞ்சிய தொகை கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து மிக்க மருந்து வகைகள் வழங்குவதற்கு பயன்படுக்கப்படவள்ளது .(கி-3)

# கூட்டணி அரசாங்கம் ஊடாக மீண்டும் பேச்சுவார்த்தை தொடரும்

## மகிந்த ராஜபக்ஷ நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்காலத்தில் அமைக்கப்படும் கூட்டணி அரசாங்கத்தின்



ஊடாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கப் போவதாக முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நோர்வே தேசிய தொலைக்காட்சி நிறுவனத்துக்கு வழங்கிய பேட்டியிலேயே மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து இது பற்றிக் கூறுகையில்,

கடந்த 2ஆண்டுக்கால சமாதான நடைமுறையின் அனுபவங்கள், குறைபாடுகள் என்பவற்றைக் கருத்தில்கொணடு அதற்கான திட்டம் ஒன்று தற்போது வரையப்பட்டுள்ளது.

ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் சில செயற்பாடுகள் காரணமாக சமாதான முயற்சிகள் பற்றி தென்னிலங்கை மக்கள் மத்தியில் அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கததிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இடையிலான பேச்சுவார்த்தையில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை.

அரசின் இத்தகைய செயற்பாடுகள் எமக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

ஆனாலும, தமிழ்மக்களின் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படவேண்டும் எனபதற்காக நாம் பொறுமையுடன் இருந்தோம்.

அததுடன் சமாதான நடவடிக்கைகளுக்கு எமது ஆதரவையும் பூரண ஒத்துழைப்பையும் வழங்கினோம்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெற்று ஆட்சி அமைததுக்கொண்டால், சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் மக்கள் கொள்ளத் தேவையில்லை.

அத்துடன், யுத்தநிறுத்தமும் தொடர்ந்து அமுலில் இருக்கும் யுத்தநிறுத்தத்தை கண்காணிக்கும் பணியில் நோர்வே தொடர்ந்து தனது பங்களிப்பை வழங்கவேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

(தி-60,10)

# இலங்கை -ஆஸி. தொடர் குறித்து இரு அணித் தலைவர்களின் கருத்து

இலங்கை-அவுஸ்திரேலிய சர்வ தேச ஒருநாள் கிரிக்கெற் போட்டிகள் எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகின்றன. இப் போட்டிகள் குறித்து பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இக கிரிக்கெற தொடர்பற்றி அணித் தலைவர்களின் கருத்துகளையும், இலங்கை அணியின் பயிற்றுவிப் பாளரின் கருத்துக்களையும் சற்று நோக்குவோம்.

**மாவன் அத்தப்பத்து**



இம்முறை போட்டித்தொடர் கடும் போட்டி மிக்கதாக இருக்கிறது. இந்திய சிம்பாப்வே அணிகளுடன் நடைபெற்ற சிறந்த போட்டிகளின் பின்னரே அவுஸ் திரேலிய அணி இலங்கை வந்துள்ளது. எமது அணி கடந்த 4 மாதங்களில் ஒரேஒரு போட்டியில் மாத்திரம் விளையாடியுள்ளது. எனினும் எமது அணியில் அனுபவம் வாய்ந்த பல வீரர்கள் இருக்கின்றனர். அதனால் 4நாள் போட்டிகளில் விளையாடியுள்ள அனுபவத்துடன் இந்தப் போட்டித் தொடரில் எமது அணி வீரர்கள் சிறப்பாக விளையாடுவார்கள். கடந்த இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் 1:0என்ற கணக்கில் வெற்றிபெற்று ஒருநாள் போட்டித் தொடரைக் கைப்பற்றினோம். எனினும் இம்முறை அவுஸ்திரேலிய அணியின் திறமைகளுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் அமைய வேண்டும்.

உலக சம்பியனான அவுஸ்திரேலிய அணியுடன் போட்டியிடுவது சவால் மிகுந்தது. எமது அணியின் அணுகு முறைகளில் மாற்றங்கள் நிகழும். கலுவித்தாரன, ஜெயசூரியா ஆகியோரை ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாகப் பயன்படுத்துவது எனறால், அந்த அணுகு முறையை நாம் கடைப்பிடிப்போம். இவர்கள் இருவரும் உலக கிரிக்கெற்றுக்கு புதிய ஆரம்பம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்தனர்.

இதற்கு ஏனை அணி வீரர்கள் இவர்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். இந்த வீரர்கள் இருவரும் ஆரம்ப வீரர்களாக இருக்கும் சந்தர்ப்பத்தில், நாம் இவர்களின் அணுகுமுறையை கடைப் பிடிப்போம். அதனால் இவர்கள் இருவரையும் பயன்படுத்த உத் தேசித்துள்ளோம். அவுஸ்திரேலிய அணியில் கிளைன் மெக்ராத், ஷேன்வோன் ஆகிய இருவரும் இப் போட்டித்தொடரில் இடம் பெறாமையால், அவுஸ்திரேலிய அணிக்கு பாதகமாகவும் எமது அணிக்கு சாதகமாகவும் அமையும் என நம்பிக்கை தெரிவித்தா.

**ஜோன் டைசன்**

கடந்த 8மாதங்களில் இலங்கை அணி ஒரேஒரு சர்வதேச ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் பங்குபற்றியுள்ள போதிலும், அவுஸ்திரேலிய அணியின் பலத்திற்கு முகம் கொடுகக்கூடிய நிலையில் இருக்கிறது.

உலகச்சம்பியன் அவுஸ்திரேலிய அணிக்கெதிராக 5 ஒருநாள் போட்டிகளில் இலங்கை அணி விளையாடவுள்ளது. இந்த 5ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் வெற்றிபெறும் மனநிலையில் இலங்கை அணி நம்பிக்கையுடன் இருக்கிறது.

அண்மைக் காலங்களில் இங்கிலாந்திற்கு எதிரான ஒரு போட்டியில் மட்டுமே விளையாடியுள்ள இலங்கை அணி அவுஸ்திரேலிய அணியை எதிர்த்தாட ஆர்வமாகவுள்ளது. இந்தப் போட்டித்தொடரை முன்னிட்டு வீரர்கள் கடும் பயிற்களில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

**றிக்கிப் பொண்டிங்**

இலங்கை அணியுடனான தொடரில் அவுஸ்திரேலிய அணி வெற்றி



பெறும் என நம்பிக்கை கொண்டுள்ளேன். கடந்த காலப்பகுதியில் கணிசமான அளவுக்கு உபகண்டத்தில் கிரிக்கெற் போட்டிகளில் பங்கேற்றுள்ளோம் இவ்வாறான நிலைமைகளில் எவ்வாறு விளையாடுவது என பது பற்றி கூடிய புரிந்துணர்வைப் பெற ஆரம்பித்துள்ளோம்.

கடந்த சில மாதங்களாக அவுஸ்திரேலிய அணியில் இரண்டாம் நிலை பந்து வீச்சாளர்களான நெதென பிராக்கன், பிரட், வில்லியம்ஸ் ஆகியோர் தமது திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளனர். இப் போட்டியில் வெற்றிபெறுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற கொண்டுள்ளோம். இலங்கையுடனான தொடர் சுவாரசியம் மிக்க விறு விறுப்பான தொடராக அமையும் என எதிர்பார்ப்பதாகவும் பொண்டிங கூறியுள்ளார்.

(தி-121,68)



**நேற்று முன்தினம் மும்பையில் நடைபெற்ற சர்வதேச மரதன் ஓட்டப்போட்டியில் இந்தியா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 20ஆயிரம் பேர் பங்கேற்று ஓடி வருவதைப் படத்தில் காணலாம்.**

# யானைப் போலோ போட்டியில் இலங்கை பிரபல்யம்

மனிதர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதில் யானைகளை அதிகமாகப் பயன்படுத்தி வரும் அதேவேளை, யானைகளைப் பயன்படுத்தி விளையாட்டுப்போட்டி நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன.

இதற்கமைய இலங்கையில் தற்போது யானைகளைப் பயன் படுத்தி ''யானைப் போலோ'' விளையாட்டு நிகழ்வொன்று அண்மையில் காலியில் நடைபெற்றது. யானைப் போலோ விளையாட்டில் ஒவ்வொரு அணியிலும் 3வீரர்கள் யானைமீது ஏறியிருந்து இப் போலோ விளையாட்டில் ஈடுபடுவா. எனினும் யானைகள், தமது தும்பிக்கையினால் பந்தை விளையாட முடியாது.

நியாயமான முறையில் இப் போட்டிகளை நடாதது் வகையில், இடை வேளையின் பின்னர் யானைகள், பாகன்கள் மற்றும் பக்கங்கள் என்பன மாற்றப்படுகின்றன. இதனால் யானைகளின் உயரம், எடை, பால் என்பவற்றில் எந்தவித கட்டுப்பாடும் இந்த விளையாட்டில் இல்லை. இதற்கமைய இலங்கையின் 4ஆவது வருடாந்த யானைப் போலோ விளையாட்டில் இறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் காலியில் நடைபெற்றன.

இந்தச் சுற்றுப்போட்டிக்கென நாட்டின் பல்வேறு பாகங்களில் இருந்து பழக்கப்படுத்தப்பட்ட 16 யானைகளை போட்டி ஏற்பாட்டாளர்கள் வாடகைக்கு அமர்த்தினர்.

நடப்பு ஆண்டுச் சுற்றுப்போட்டியில் 7நாடுகளைச் சேர்ந்த 8அணிகள் பங்குபற்றியிருந்தன. இலங்கை யானைப்போலோ சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போட்டி சில ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கையில் அறிமுகப்படுத் தப்பட்டதுடன், தற்போது பிரபல் யமடைந்து வருவதையும் இங்கு காணமுடிகின்றது.

அன்றைய தினம் நடைபெற்ற இறுதிப் போட்டிகளில் குவளைக் கான இறுதிப் போட்டியும், கிண்ணத்திற்கான இறுதிப் போட்டியும் நடைபெற்றன.

குவளைக்கான இறுதிப் போட்டியில் எலித்தினைஸ் அணி 5:1 என்ற கோல்களினால் வெற்றி பெற்றது. கிண்ணத்திற்கான இறுதிப் போட்டியில் குற்றத்துரைச சேர்ந்த ரிப்பிள் அன்ட் ஜவரைஸ் அணி, சப்பரதான்ஸ் அணியிடம் தோல்வியைத் தழுவியது. இதில் சப்பிரதான்ஸ் அணி தொடர்ச்சியாக 3ஆவது தடவையாக சம்பியன் பட்டத்தை வென்றெடுத்தது குறிப்பிடத் தக்கது. (தி-68)

# கால்பந்தாட்ட சம்மேளனத்தில் பெண் உறுப்பினர் தெரிவு

இலங்கை கால் பந்தாட்ட வரலாற்றில் முதன் முதலாக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தில் பெண் ஒருவர் இடம் பெறவுள்ளார்.

2004/2005ஆம் ஆண்டிற்கான நிர்வாகத் தெரிவு அடுத்த மாதம் 27ஆம் திகதி நடைபெறும் போது, இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் உபதலைவர்களில் ஒருவராக மகளிர் கால் பந்தாட்ட சங்கத்தின் தலைவி லெரின் பீரிஸ் நியமிக்கப்படவுள்ளார்.

இதேவேளை நடப்பாண்டிற்கான இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் நிர்வாகிகள் அனைவரும போட்டி இன்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்படவுள்ளதாக சம்மேளனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கிருஸாந் பெரேரா தெரிவித்துள்ளார். சம்மேளன அதிகாரிகளுக்கிடையே நிலவும் ஒற்றுமையுணர்வும் சம்மேளனத்தின் மீது லீக்குகள் கொண்டுள்ள அபரீதமான நம்பிக்கையுமே இதற்கு முககிய காரணம் எனவும் அவர் குறிப பிட்டுள்ளார்.

(தி-121)



**பாரிஸில் நடைபெற்ற டபிள்யூ.ஏ.பாரி ஓபன் மகளிர் டென்னிஸ் போட்டியில், வெற்றிபெற்ற பெல்ஜிய வீராங்கனை கிம் கிளிடர்ரான் சம்பியன் டிராஃயுடன் நிற்பதைப் படத்தில் காணலாம்.**

# ஆபிரிக்க கால்பந்தாட்டத்தில் ரேக்கினேசியா சம்பியன்

ஆபிரிக்க நாடுகளிக்கிடையிலான கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் வெற்றி பெற்ற ரேக்கினேசியா முதல் தடவையாக சம்பியன் பட்டத்தினைத் தன தாக்கிக் கொண்டுள்ளது.மொரோக்கோ அணிக்கெதிராக கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் ரோக்கினேசிய அணியினர் 2:1என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இப் போட்டி ஆரம்பித்து 15வது நிமிடத்தில் ரேக்கினேசிய அணிவீரரான டொஸ் சென்ரோஸ் தமது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார். எனினும் இடைவேளையின் பின்னர் மொரோக்கோ அணி வீரரான யூசுப் மாக்ரொரே சிறந்த முறையில் தமது அணிக்காக ஒரு கோலைபெற்றுக்கொடுத்து கோல் எண்ணிக்கையினைச் சமப்படுத்தினார். போட்டியின் 52வது நிமிடத்தில் ரேக்கினேசிய அணி வீரரான சிஹப் ஜஸ்ரிரே வெற்றிக் கோலைப் போட்டு ஆபிரிக்க கால்பந்தாட்ட சுற்றுபபோட்டியில் ரேக்கினேசிய அணியை சம்பியனாக்கினார்.

(தி-68)

# இத்தாலிய சைக்கிள் ஓட்ட வீரர் மரணம்

பிரான்ஸ் சைக்கிள் ஓட்டப் போட்டியில் 1998ஆம் ஆண்டு சம்பியனான இத்தாலிய வீரர் மார்கோஸ் பென்டனி காலமானார். இவர் உறக்கத்தில் இருந்த போதே மரணமாகியுள்ளதாக இவர் தங்கியிருந்த ஹோட்டேல் முகாமையாளர் தெரிவித்துள்ளார். இந்த மரணத்திற்கான காரணங்கள் இதுவரை கண்டறியபபடவில்லை. எனினும் பெண்மணி உளரீதியாகப் பாதிக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்ற அதேவேளை இவர் தங்கியிருந்த அறையினுள் மருந்துப்பொருட்கள் சில கண்டு பிடிக்கப்படடுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் இவர் தங்கியிருந்த அறையினுள் எந்தவித மோதலோ அல்லது வேறு எதுவித சம்பவங்கள் இடம்பெற்றமைக்கான தடையங்கள் எதுவும் இல்லை. என்ற தகவல்களும் வெளியாகியுள்ளன. எனினும் 1998ஆம் ஆண்டு நடைபெற்ற பிரான்ஸ் சைக்கிள் ஓட்டப்போட்டியில் சம்பியனாக வந்திருந்த மார்க் கோஸ்பென்டனே தடைசெய்யப்பட்ட ஊக்கமருந்தை உட்கொண்டது தொடர்பாக பல சநதர்ப்பங்களில் குற்றம்சாட்டப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத் தக்கது. (தி-68)

# தடகளப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் இல்ல தடகளப் போட்டிகள் எதிர்வரும் 20ஆம் திகதி பிப.2மணிக்கு அதிபர் க.ஆனந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முன்னாள் இந்துக்கல்லூரி அதிபர் அ.பஞ்சலிங்கம், கோட்பாய்க் கோட்ட உதவிக் கலவிப்பணிப்பாளர் இ.சிவஞான சுந்தரம், கல்விக்கழகப் பொறுப்பாளா கவியன்பன் ஆகியோர் விருநதினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.(ச)

# றகர் போட்டியில் பிரான்ஸ் வெற்றி

ஐரோப்பிய நாடுகளுக்கிடையே நடைபெறும் றகர் கால்பந்தாட்டப் போட்டியில் பிரான்ஸ் மற்றும் வேல்ஸ் அணிகள் தமது ஆரம்பப் போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளன. பரிஸ் விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற அயாலாந்துக் கெதிரான போட்டியில் 35:17என்ற புள்ளிகள் அடிப்படையில் பிரான்ஸசும் காடெப் மிலேனியம் விளையாட்டரங்கில் நடைபெற்ற மற்றுமொரு போட்டியில் ஸகொட்லாந்தை 23:10 எனற அடிப்படையில் வேல்ஸ் அணியும் வெற்றிபெற்றன.(ச-121)

# ஜனாதிபதி காய் நகர்த்தலில் சிங்காரி

சர்வ அதிகாரங்களையும் உள்ளடககிய ஓர் ஜனாதிபதி ஆட்சியமைப்பை உருவாக்கி, அதைக்கட்டி ஆண்ட பெருமை ஜே.ஆர். ஜெயவர்த்தனவையே சாரும். ஒவ்வொரு வார்த்தைப் பிரயோகமும் பல தடவை பரிசீலிக்கப்பட்டு, எந்தக் காரணத்தைக்கொண்டும் ஒரு ஜனாதிபதி



யாகத் தான் எடுக்கப்போபவை விபரீத முடிவுகளையோ, இனத்துவேச நிலைப்பாடுகளையோ, சர்வாதிகாரச் செயற்பாடுகளையோ தட்டிக்கேட்கும் உரிமை நீதிமன்றம் உட்பட யாரிடமும இருந்துவிடக்கூடாது என்பதில் அதீத அக்கறை காட்டி, கடுமையான சட்டவிதிகளை உள்ளடக்கி அமைக்கப்பட்டதே சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதி ஆட்சிமுறை.

### சர்வ வல்லமை ஆட்சி அதிகாரங்கள்

இந்த அதிகாரப் பலத்தை வைத்துக்கொண்டே, இனக் கலவரங்களை நாடளாவிய ரீதியில் முடுக்கிவிட்டமை உட்பட பிரதமர் சிறிமாவின் குடியுரிமையையே பறித்தமை, அமைச்சர்களைத் தான் நினைத்தபடி இசைவாக்கமடையச்செய்தமை, தமிழர் பரம்பரையை அழித்தமை, தமிழர் சொத்துக்களையும், கல்வியையும் நிர்மூலமாக்கியமை, தமிழ்க் கட்சிகளைச் சிதைத்தமை, தமிழ்-முஸ்லிம் கலவரங்களைக் கட்டவிழ்த்து விட்டமை, ஜே.வி.பி. போன்ற உரிமை கோரும அமைப்புக்களை வேரோடு துண்டாடியமை, பௌத்த மதத்தையும சிங்கள மொழியையும் அரச கருமங்களில் கனமாகத் திணித்தமை, வடக்கு-கிழக்கில் கடுமையான தணிக்கைக்குக் கீழே உலகிறகுத் தெரியாத இன அழிப்பைத் தொடர்ந்தமை, ஊடகங்களை ஊமையாக்கியமை, மலையக மக்களை இருட்டடிப் புச்செய்தமை, இந்திய வல்லரசையே தன்வசம் ஆதரவுக்கரம் நீட்ட ஆணையிட்டமை, ஜயவர்தனபுரம் எனும் அந்தப்புரத்தை அமைத்தமை உட்பட இன்னும் இன்னோரன்ன அனைத்தையும் தான்தோன்றித்தனமாக நிறைவேற்ற இந்தச் சர்வ வல்லமை பொருந்திய அதிகாரப் பீடமே ஜே. ஆருக்குத் துணை போனது.

### ஆசை யாரை விட்டது?

எதிர்க்கட்சியில் இருந்தவர்கள் என்னதான் இந்த அதிகார ஜனாதிபதி ஆசனத்தை எதிர்த்துக் குரல் கொடுத்தாலும் "தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்குப் படக்கு'' என்று அடித்துக் கொள்வது போலத் தனது கட்சியும் இதே சர்வ வல்லமையுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி சிலகாலம் கோலோட்சினால் என்ன என்ற பேராசை மட்டும் எந்தக் கட்சியின் தலைமையையும் வசப்படுத்தாமலில்லை. இதற்கு சந்திரிகா என்ற பரம்பரை அரசியல்வாதியும் விதி விலக்காய் இருந்து விடவில்லை.

1994ஆம் ஆண்டு காலப் பகுதியில் கடுமையான அரசியல் பிரசாரத்தின் போது, முன்னிலைப்படுத்திய 2 பீரங்கிப் பிரசார அறிவிப்புக்களில் முதன்மையானது, "தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையுடன் நேரடியாகப் பேசி, இனப்பிரச்சினையை முடிவுக்குக்கொண்டுவருவது'' எனபது. அவரது இரண்டாவது அறிவிப்பு "சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதி ஆட்சியைத் தான் ஆட்சிப்பீடமேறிய 6 மாதங்களுக்குள் நீக்கிடுவதென்பது நாடகங்களையெல்லாம்

**"சாத்தியமா சந்திரிகாவின் இரகசிய வியூகங்கள்?'' எனும் தலைப்பில் குயின்ரஸ் துரைசிங்கம் எழுதிய இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரங்களை உள்ளடக்கிய கட்டுரை வலம்புரி வாசகர்களுக்காக இங்கே தரப்படுகிறது.**

ஆனால், இவ் வருடத்துடன் தனது 10வது வருடததை ஜனாதிபதி ஆசனத தில் கடக்கும் சந்திரிகா, இது வரை



அது குறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை.

### தமிழினத்தின் வேதனை

இதைவிட, இன்னும் பல சுவையான, கவர்ச்சியான அரசியல் அறிவிப்புகள பல சந்திரிகாவினால் முன் மொழியப்பட்டன. மக்கள் இப் பெண்மணியின் கவர்ச்சிகரமான பரசாரங்களில் பழையதெல்லாம் கொஞ்சம் மறந்தனர். எஸ். டபிள் யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க என்ற இவருடைய தந்தை படைத்த சிங்கள பௌத்த இனவாத அறிவிப்புக்களையும் நடைமுறைப்படுத்த அவா கொண்ட வியூகங்களையும் அதனால் நிரந்தரமாகத் தமிழ் இனம் அடிமைப்படுத்தப்பட வழி பிறந்ததையும் அப்போதென்னவோ சந்திரிகாவின் சேலைத் தலைப்பு மக்களின் கண்களை மறைத்துவிட்டது.

ஆனால், தமிழ் மக்களின் பெரும்பான்மைப பலத்துடன் தான் சந்திரிகா முதலில் ஆட்சிப் பீடமேறினார் என்பதை அவரிடம் இப்போது சொன்னால், அதை மறுப்பதற்கும், அப்படிச் சொன்னவரை அப்படியே அழித்துவிடுவதற்கும் கூட அந்த சிங்காரி சநதிரிகா இப்போது பின்நிற்க மாட்டார். ஆனால், அதுதான் உண்மை. சமாதானத்தைத் தமது மூச்சுக்காற்றாய் சுவாசிக்க ஆசைபபட்ட அடக்கி ஒடுக்கப்பட்ட தமிழினம், சந்திரிகா விரித்த வலையில் தற்செயலாய் விழுநததால் வந்த நிலைதான் அதன் பின் நிகழ்ந்த அத்தனை வேதனை தரும் நிகழ்வுகளுக்கும் காரணம் என்பதைத் தமிழினம் மறந்து

விடக்கூடாது. அரசியல் இலாபம் தேட அவ்வப்போது பாம்புத் தோலைப் போர்த்துக் கொள்ளும் அற்ப ஆசையுள்ள தமிழ் அரசியல்வாதிகளும் இந்த

மறந்துவிடக் கூடாது என்பது மிகவும் முக்கி யமானது.

### சந்திரிகா சமைக்கும் வியூகம் தான் என்ன?

2000ஆம் ஆண்டு இடம் பெற்ற இரண்டாவது ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் பலமான உறுதிமொழிகளை வழங்கி ஜனாதிபதி என்ற தனது ஆசனத்தைத் தக்கவைத்துக்கொண்ட சநதிரிகாவுக்கு அப்போதே தனது பதவிக்காலத்தின் ஆயுள் இன்னும் ஆறே வருடம்தான் என்ற வருத்தமும் தொற்றிக் கொண்டது. சர்வ வல்லமைகளையும் அதிகாரங்களையும் இந்தக் கதிரைக்கு வழங்கிய ஜே.ஆர். ஜெயவர்த்தனவே காலத்தை நீடித்து மூன்றுமுறை ஜனாதிபதியாக ஒருவரே வருவதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சரத்தை இணைக்க மறந்து போனார்.

அதற்கு அவரது வயதும் ஒரு காரணமாக இருந்தது. தனது ஜனாதிபதிக் காலத்தைத் தான் ஓய்வு பெறுமுன் தொடரும் 12 வருடங்களுக்கு அனுபவித்தால் போதுமென்ற நிலை இருந்ததால், அதற்குப்பின் தொடரும் ஒரு வசதியை அப்போது அவர் அங்கே இணைத்துக் கொள்ளவில்லை. அப்படி அவர் இணைத்துக்கொண்டிருந்தால், இப்போது சந்திரிகா அவசரப்பட்டு பாராளுமன்றத்தைக் கலைத்திருக்கும் தேவையும் இருந்திருக்காது. அப்படியென்றால் இப்போது ஓரளவிற்கு உங்களுக்குப் புரிந்திருக்கும் தற்போது சந்திரிகா எதை நோக்கிக் காய் நகர்த்துகிறார் என்று.

### சந்திரிகாவின் தேவை

எதிர்வரும் 2006ஆம் ஆண்டில் முற்றுப்பெறும் அவரது இரணடாவது ஜனாதிபதிக் காலத்திற்குப் பின்னர், அரசியலில் இருந்து ஓய்வுபெறும் எண்ணம் சந்திாிகாவிற்கு முற்றிலும் இல்லை. வயது போன ஜே.ஆர்.ஓய்வு பெற்றிருக்கலாம். ஆனால், ஆட்சி யில் இருந்து அனைத்தையும் அனுபவிக்கும் சந்திரிகாவிற்கு அதைவிட்டு விட விருப்பம் எதுவும் இருக்கப்போவதில்லை.

அதனால், தனது அதிகாரத்தைப் பாவித்து எத்தனை தேர்தல்களை நடாத்தியும் எத்தகைய விபரீதக் கூட்டணிகளை அமைத்தும் தனது கட்சியையே வெற்றி பெற வைக்கவேண்டிய தேவை சந்திரிகாவிற்கு இருக்கிறது.

### என்ன காரணம்?

தனது கட்சியே தேர்தலில் வெற்றிபெற்றுப் பாராளுமன்றம் நுழைந்தால், உடனடியாகவே தான் உறுதியளித்தபடி ஜனாதிபதி முறையை ஒழிக்கிறேன் பார் என்று மக்களை ஏமாற்றி, தான் பிரதம மந்திரியாகப் பதவியேற்று, ஜனாதிபதி முறையை அகற்றி, ஜனாதிபதிக்கு உரித்தான பல உரிமைகளையும் வல்லமைகளையும மீண்டும் பிரதம மந்திரிக்கே வழங்கி, தான் ஓர் வல்லமை பொருந்திய பிரதம மந்திரியாக ஆட்சியைத் தொடரலாம்.

இதன் மூலம் 2006ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசியலில் இருக்கமுடியாது என்ற நிலைமை மாறி,

சந்திரிகா தொடர்ந்தும் பிரதம மந்திரி யாக எத்தனை காலத்திற்கும் வலம வரும வாய்ப்பு உருவாகி விடும்.

### தேர்தலில் தோல்வியுற்றால் என்ன நிலைமை?

தேர்தலில் அறுதிப் பெரும் பான்மைப் பலத்துடன் வெற்றி பெற்றுத் தன்னால் பாராளுமன்றம் வரமுடியாது என்பது சந்திரிகாவுக்கும தெரியும. இருந்தாலும், ஐக்கிய தேசிய முன்னணியும் அறுதிப பெரும்பான்மைப் பலத்தைப் பெறாது என்பதை அனுமானித்துள்ள சந்திரிகாவிடம தனது பொய் வாக்குறுதிகளை வாரி வழங்கி, பௌத்த சிங்கள இனத் துவேசத்தை சிங்களக் கிராமங்கள் தோறும் வீசி வாரி, எப்படியும் சிறிய கட்சிகளை வளைத்துப் போட்டுவிடலாம் என்ற ஊகம் மட்டும இருக்கிறது.

அப்படியும் தேர்தலில் பாராளுமன்றப் பெரும்பான்மைப் பலத்தை நிருபிக்க முடியாது போகிறது என்று வைததுக் கொள்வோம். அப்போதும் மீண்டும் அவருக்குக் கைகொடுக்க, ஜனாதிபதி பதவியின் சர்வ வல்லமை அதிகாரங் கள் கைவசம் இருக்கின்றன. போதிய பலமற்ற ஐக்கிய தேசிய முன்னணியிடம் பாராளுமன்றத்தைக் கையளிக்கும் நிலை இல்லாமையால் நாட்டின் பாதுகாப்பையும் இறைமையையும் கருதி, நாட்டின் நலனுக்காக இடைக்கால ஜனாதிபதி ஆட்சி முறையை அறிவிப்பதாக சந்திரிகா அம்மையார் மீண்டும் ஒரு குட்டி மாயாஜால அரசியல் அறிவிப்பு விடுக்கலாம்.

இதன் மூலம் தற்காலிகமாகத் தனது ஆட்சியைத் தொடர்வதோடு, தான் ஏற்கனவே அறிவித்த உறுதி மொழியின்படி, ஜனாதிபதி ஆடசி முறையை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுககும் வியூகத்தையும் முன்மொழியலாம்.

இதனது அடுத்த கட்டமாக ஜனா திபதி ஆட்சியை இல்லாமற் செய்து, தானே "புதிய பிரதமர்'' என்ற மாற்று அறிவிப்பைக் கூடச் செய்யலாம்.

எல்லாவற்றிற்கும் துணை யாக சந்திரிகாவிற்குக் கை கொடுக்கப்போவது அவரது சர்வ வல்லமையுள்ள 'ஜனாதிபதியின் அதிகாரங்கள்' தான்.

### மக்கள் ஆய்வு

தற்செயலாக இது குறித்து சட்டப் பிரச்சினைகள் எழுப்பப் படும் பட்சத்தில் மீண்டும் ஜே. ஆர். பயன்படுத்திய ஒரு ஆயுதம் சந்திரிகாவிடம் கைவசம் இருக்கிறது. என்னவென நீங்களும் அறிய ஆவலாய் இருப்பீர்கள். அதுதான் 'ரெபரெண்டம்' என்றழைககப்படும் 'ஆம் அல்லது இல்லை' என்று மக்களை விடை கூற அழைக்கும் மக்கள் ஆய்வு.

"ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாது ஒழிக்கும் நோக்கில் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் சநதிரிகாவாகப் பதவி மாறுவதையும், அதன் பின்னா ஜனாதிபதி பதவியை இல்லாமற் செய்வதற்கும் நீங்கள் விருப்பம் தெரிவிக்கிறீர்களா'' என்ற கேள்வியை மட்டும் முன் வைத்து, 'ஆம் அல்லது இல்லை' என்று மக்களைப் பதில் கூறப்பணித்தால் பலத்த பெரும்பான்மையுடன் சந்திரிகா பிரதமராகி விடலாம்.

இந்த 'ரெபரெண்டம்' மூலம் ஏற்கனவே பதவியை நீடிப்பதில் வெற்றி கண்டவர் ஜே.ஆர். ஜெயவர்த் தன என்பதை நீங்கள் மறந் திருக்க மாட்டீர்கள்.

### முடிவுதான் என்ன?



எப்படிப் பார்த்தாலும் சந்திரிகாவின் கீழ் பாராளுமன்றம் வந்தாலன்றி, பிறிதொரு நபரின் கீழ் உருவாகப்போகின்ற பாராளுமன்றத்தை ஜனாதிபதி சந்திரிகா எக்காரணம் கொண்டும அனுமதிக்கப்போவதில்லை. அப்படி அனுமதிப்பது மீண்டும் "பழைய குருடி கததவைத் திறவடி'' என்ற கதையாக, சந்திரிகா என்ற ஜனாதிபதியையும் ரணில் என்ற மாற றுக்கட்சிப் பிரதமரையும் உள்ளடக்கிய அதே பழைய திரிசங்கு நிலைக்கு இட்டுச் செல லும்.

இந்த முடிவை அடை[illegible] தற்கா இத்தனை பெரிய நாடகங்கள் தயாரித்து நாட்கணக் காய் நடத்துகிறார் சந்திகா? இல்லவே இல்லை.

### தமிழரின் சாபக்கேடு

அதனால், ஸ்ரீலங்கா என்ற நாடடில் இனி உருவாகும பாராளுமன்றத்தில் அதிகார ஆசனத்தில் சந்திரிகா அமரும் வரை, அமைதிக்குப் பஞ்சம்தான்! தனது சிம்மாசனத்தை உறுதி செய்ய முயலும் சந்திரிகா சமாதானம் மலர்வதை விருமபாத கூட்டணிக்கட்சியுடன் கை கோர்த் திருப்பதே தமிழர்களின் மிக மோசமான சாபக்கேடாக அமைந்துவிட்டது!

### சர்வதேச ஆதரவு

தமிழர்களுக்கு இனி மேல் துருபபாக இருக்கப்போவது "ச[illegible] தேச ஆதரவு மட்டுமே'' இரு[illegible] தாலும், கடந்தகால அனுபவத்தில சர்வதேச அழுத்தங்கள் நிரந்தரமானவையல்ல என்பதை அவதானித்திருக்கிறோம். ஆனானப்பட்ட ஐ.நா.வின் அழுத்தத்தையே அமெரிக்கா கண்டு கொள்ளவில்லை என்று பார்க்கும்போது, ஆசியாவின் சுட்டு விரலை விடச் சிறிய இலங்கை எம்மாக்கிாம்?!

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக் கழகம்.

## 49 தேசவழமை அதிகாரம்-8

## ஆண் பெண் சிறைகளைப்பற்றியது

### பிள்ளையில்லாமல் மரணிக்கும் சிறைகளின் ஆதனத்தைப் பிரிவிடும் விதம்

3. இந்த வர்க்கத்தின் சிறைகள் புருஷன் பெண்சாதியாயிருந்து சில காலத்தின் பிறகு அவர்களிருபேரில் ஒருவர் செத்தபோது, அந்தச் சிறைகளுடைய சகோதரர்களான ஆணென்கிலும் பெண்ணென்கிலும் மறுபேர்களுடைய சிறைகளாயிருந்தால், இறந்த சிறையினுடைய முதுசொமும் சீதனமும் தேட்டத்தில் ஒன்று பாதியும் அந்தச் சிறையை ஸ்வதது ஆண்டு வந்த எசமான் பிரித்துக்கொண்டுபோய்விடுவான். இறந்துபோன சிறையினுடைய ஆண் பெண்ணான சகோதரங்களும் அந்த எசமானுடைய சிறைகளாய் இருநததேயுண்டானால், அப்போது அவன் அதிலே அத்தனை பாராமல் தானும் சீதனம் பண்ணுகிறதற்கு ஒன்றுமில்லாத வறியவனல்லாதிருந்தால் சகலத்தையும் அவர்களுக்குத்தானே விட்டு விடுவான்.

### பிள்ளைகளிருக்கும்போது ஆதனம் பிரிக்கும் விதம்

4. ஆனால் இப்படிப்பட்ட சிறைகள் கூடி பிள்ளை அல்லது பிள்ளைகள் பிறந்ததுண்டானால் அந்தப் பிள்ளைகளுடைய பிதாக்காலஞ்சென்றவிடத்தில், அந்தப் பிதா மறுபேரின் சிறையாயிருந்தால் அந்தப் பிள்ளை அல்லது பிள்ளைகள் ஆணென்கிலும் பெண் ணென்கிலும் பிதாவினுடைய உரிமை பெறக்கூடாது. ஆனால், மாதா செத்துப்போனதுண்டானால், அப்போது அவளுடைய எசமானானவன் கொண்டுவந்த சீதனத்தில் அரைவாசியையும் தேட்டத்திற் கால்வாசியையும் தான் பிடித்துக் கொள்ளுகிறதானாலும் பிடித்துக்கொள்ளுவான். அல்லது அவன் வைத்துப்போன சகலத்தையும் அவளுடைய பிள்ளைகளுக்குக் கொடுத்துவிடுகிலுங் கொடுப்பான். அவன் பிரியம் போல நடப்பிக்கலாம். ஏனென்றால் பிதா ஒருவனுடைய சிறையாகவும் மாதா வேறொருவனுடைய சிறையாகவுமிருந்தால் அப்படிப்பட்ட சிறைகளுடைய பிள்ளைகள் பெண் சிறைகளையுடையவர்களுக்கே உடையவைகளாம். ஆனால் பழைய காலத்திலே ஒரு வழக்கமிருந்தது. அதாவது, வேறொருவருடைய பெண் சிறையை விவாகம் பண்ணியிருக்கிற ஆண் சிறை சிறைக்குடையவன் தன் சிறைக்கு ஐந்தாறு பிள்ளைகளிருந்தால் அவைகளில் ஒரு ஆண்பிள்ளை மாத்திரம் பிடித்துக்கொள்வது வழக்கம். பிள்ளைகள் எல்லாம் பெண் பிள்ளைகளாயிருந்தால் அப்படிப்பட்ட உரிமை அந்த எசமானுக்குக் கிடைக்க மாட்டாது. ஆனால் இவ்வுரிமை இக்காலத்திலே முன்னே சொல்லப்பட்ட கட்டளைப் பிரசித்தத்துக்கு முன் அரசாட்சியாருடைய ஆண் சிறைகள் குடிசனங்களுடைய பெண் சிறைகளை விவாகம் பண்ணியிருந்தால் அரசாட்சியாருக்கு மாத்திரம் கிடைக்குமல்லாமல் வேறொருவருக்கும் கிடைக்கமாட்டது.

### விவாகம் பண்ணின சிறைகளின் கடமைகள்

5. இந்தவகையான ஆண்சிறைகள் பெண்சிறைகளெல்லாம் தங்களுடைய எசமான்கள் புறமாக இருக்கிறதில்லை. அவர்கள் இயன்ற மாத்திரந் தங்கள் பிழைப்பிடங்கள் தேடிப் புறம்பாக இருக்கவேணும். அரசாட்சியாருக்கு எசமான்கள் செய்யவேண்டிய ஊழியமும் இச்சிறைகளே செய்யவேண்டியது. ஆனால் உடையவர்கள் அப்படிப்பட்ட நாட்களுக்குத் தீன் செலவு கொடுப்பார்கள். இந்த ஊழியங்களிலே குறைபாடு வந்து உடையவர்களைச் சிக்கிலே எழுதியிருந்ததேயுண்டானால் அரசாட்சியார் எசமானிடத்தில் சிக்குப் பணத்தைக் கேட்குமிடத்து சிறைகள் தீன்செலவு வாங்கிக்கொண்டு ஊழியஞ் செய்யாமல் தங்கள் எசமான்களை அணாப்புதல் பண்ணின படியாலும் எசமான்கள் பேரிற் குறையல்ல, தங்கள் பேரிற் குறையான படியாலும் அந்தச் சிக்குப்பணம் நயினார்களுக்காகச் சிறைகள் அவரவர்கள் தாமே இறுக்க வேணும். அல்லாமலும் அந்த உடையவர்கள் தங்கள் காணிகளின் வேலியடைக்கிற பணிவிடைக்கு அழைத்த சமயத்தில் அந்தப்பணிவிடை போய்ச் செய்து கொடுக்கிறதற்கு ஆயத்தமாயிருக்க வேண்டும். அந்த உடையவர்கள் தங்கள் பணிவிடை செய்விக்கிற நாட்களுக்கெல்லாம் தீன்கொடுக்க வேண்டியது. அன்றியும் சிறைகளுடைய பிள்ளைகளில் ஆடு மாடு மேய்க்கத்தக்க பிராயமுள்ள ஆண் பிள்ளைகள் உண்டானால் எசமான் அந்த வேலை செய்வதற்குத் தனக்குப் பிரியமான பிள்ளைகளைத் தெரிநதெடுத்துத் தன் பணிவிடையிலே நிற்குமளவும் அன்னவஸ்திரங் கொடுக்கவேண்டும்.

### காணி முதலியவற்றையுடைய சிறைகளை விற்றல்

6. யாதொருவர் தங்கள் சிறைகளிலே ஒரு ஆண் சிறையையென்கிலும் பெண்சிறையையென்கிலும் விற்க வேணும் என்கிற காலத்திலே இந்தச் சிறை தனதாக ஆட்சி பெற்று வந்த காணி பூமி தோட்டங்கள் மற்றும் யாதொரு வஸ்துக்களுண்டானால் அப்போது அந்த உடையவன் தான் விற்கப்போகிற சிறையின் ஆதனத்தின் பேரிலே தனக்குண்டான உரித்தை இழந்து போகாதபடிக்கு விற்கமுன் தான் தானே அந்த ஆதனங்களைக் கையாடிக்கொண்டு தன்னுடைய மனதுக்கிணங்கச் செய்து கொள்ள வேண்டியது. அப்படி நடபபியாமல் வகைமோசங்களாகவென்கிலும் மறு விதங்களாகவென்கிலும் அந்தச சிறைகள் புறமாக யாதொரு பிசகில்லாமல் அந்த நிலைமைகளை ஆளும்படி விட்டு வைத்ததேயுண்டானால் பின்பு அவைகள் பேரில் வழக்குத்தொடரவொண்ணாது.

ஆஸ்தியுள்ளவர்களும் வெகு சிறையுள்ளவர்களுமாகிய குடியான பேர்களிலே சிலர் தருமக்கிரியைகளைக் குறித்து ஒரு, எளிய கைம்பெண் சாதியினுடைய பெண் பிள்ளைக்குக் கலியாணம் முடிக்கிற நிமித்தமாக அவளுக்கு நன்கொடையாகவென்கிலும் சீதனமாகவென்கிலும் ஒரு பெண் சிறையைச் சிலவேளை கொடுப்பார்கள். அப்படிக்கொடுத்த காலத்தில் உடையவர்களாய் இருக்கப்பட்ட பேர்கள் அந்தச் சிறை வழி போகவொண்ணாது. சீதனங் கொடுக்கப்பட்ட அந்தப் பெண் சிறையின் பிதா மாதவும் தங்கள் வீட்டினிடமாக அவள் நிலையாயிருந்தாளேயாகில் அவள் வளர்ந்து பக்குவப்பட்டதின் மேல் அவளைக் கலியாணம் முடித்துக்கொடுக்கிற காலத்தில் தங்கள் ஆதனத்தில் யாதொன்று அந்தப் பெண்பிள்ளைக்குச் சீதனமாகக் கொடுக்கப்படாது. அதேனென்றால் அந்தப் பிதா மாதாவுக்குடைய ஆதனஞ் சகலமும் உட்பட அவர்களுடைய எசமான்களுக்குடையவைகளல்லாமல் அவர்களுக்கு உடைமையானவையல்ல. முன்சொல்லிய பிரகாரம் அவர்களுடைய பிள்ளை மறுபேருக்கு நன்கொடையாகக் கொடுக்கப்பட்டபடியால் அந்தப் பிள்ளை மறுபேருடைய சிறையாய் விடுகின்றது. ஆதலால், அந்தப் பெண் சிறையினுடைய முந்தின எசமான் சம்மதித்தாலேயன்றி அவளுடைய பிதாமாதாவின் ஆதனத்தில் யாதொரு பங்கு பெறுகிறதில்லை.

(தொடரும்)

## ஈர்க்குவாணம் விட்ட இளைஞனுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

சீறிவந்த ஈர்க்குவாணம் கண்ணைப் பதம் பார்த்தது. இதனால் பாதிப்படைந்த நபர் பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து சம்பந்தப்பட்ட நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் அண்மையில் திருநெல்வேலி பனிக்கர் வீதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த அருட்சிலும் செந்தூரன் என்பவரே கண்பாதிப்புக்குள்ளானவராவார்.

கடந்த மாதம் தைப்பொங்கல் தினத்திற்கு முதல் நாள் கனகரட்ணம் நிஷாந்தன் என்ற இளைஞன் ஈர்க்குவாணம் விடுவதில் ஈடுபட்டிருந்தார்.

இதன்போது பிரஸ்தாப நபர் விட்ட ஈர்க்குவாணத்தில் ஒன்று சீறிவந்து செந்தூரனின் கண்ணைப் பதம் பார்த்தது. சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அவர் கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

இம் முறைப்பாட்டையடுத்து சந்தேகத்தின் பேரில் நிஷாந்தன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு, யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் முதலாந் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி இ.த.விக்னராஜா உத்தரவிட்டார். (த-3)

## சிலாபம் பகுதியில் விசேட பொலிஸ் பாதுகாப்பு

(சிலாபம்)

சிலாபம் பொலிஸ் பகுதிக்குள் விசேட பொலிஸ்பாதுகாப்புத் திட்டம் ஒன்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார்.

சிலாபம் ஆராச்சிக்கட்டுவ, மாரவில ஆகிய பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிலாபம் பகுதியில் நடைபெற்றதாகக் கூறப்படும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமானது தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் இடம்பெற்ற முதலாவது தேர்தல் வன்முறைச் சம்பவமாகக் கருதப்படுகிறது. (ம)

## பாடசாலை மைதானம் அருகே கண்ணிவெடி

(ஊர்காவற்றுறை)


ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதான எல்லை வேலி அருகே கண்ணிவெடி ஒன்று புதைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மைதான எல்லையில் புதைக்கப்பட்டுள்ள இக்கண்ணிவெடியை பாடசாலை மாணவர்கள் அச்ச உணர்வுடன் சென்று பார்வையிடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்ணிவெடி புதைக்கப்பட்டுள்ள இடத்திலிருந்து 50 மீற்றர் தூரத்தில் பொலிஸ் காவலரண் ஒன்று உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-75)



ஊர்காவற்றுறை மேற்கு சென். ஜேமிஸ் முன்பள்ளித் திறப்பு விழாவில் விருந்தினராகக் கலந்து கொண்ட ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம், பிரதேச சபைச் செயலாளர் கணேசலிங்கம், போருட் திட்ட இணைப்பாளர் வி.என். மூர்த்தி மற்றும் ஜே/49 கிராம அலுவலர் ஜே.பத்திநாதன் ஆகியோரைப் படத்தில் காணலாம்.
(படங்கள்:வி.பிரான்சிஸ்)



தொண்டமனாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வொன்றில் இந்து கலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம் வாழ்த்துரை வழங்குவதையும், அருகில் நீர்வைமணி ஐயர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## இன்று ஒரு தகவல்

# அதுவாகி விடுங்கள்

ஒரு ஊரில் ஒரு ஞானி இருந்தார். அவர் அவர்பாட்டுககு இருந்தார். அவரைத் தேடிக்கொண்டு சிலர் சென்றனர்."என்ன சுவாமி... எப்படியிருக்கிறீர்கள்?'' என்று கேட்டனர். " நான் ஒரு சாதாரண வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்'' என்றார். " அப்படியென்றால் என்ன அர்த்தம்... உங்கள் கொள்கை என்ன? '' என்று கேட்டனர். " என் கொள்கை இதுதான், பசி எடுத்தால் சாப்பிடுவது... தூக்கம் வந்தால் தூங்குவது... அவ்வளவு தான்'' என்றார்.

ஞானி இப்படிக் கூறியதும் கேள்வி கேட்டவர்களுக்கு ஆச்சரியமாகிவிட்டது. அதோடு சந்தேகம் வேறு. "என்ன இது, இவர் எவ்வளவு பெரிய ஞானி, அவர் போய் இவ்வளவு சாதாரணமாகக் கூறுகின்றாரே இவர் உண்மையாகத்தான் இப்படிக் கூறுகின்றாரா அலலது எதையாவது மூடிமறைக்கிறாரா? ஒன்றும் புரியவில்லையே'' என்று யோசித்தனர்.

அதனால் மீண்டும் கேட்டனர். " என்ன சுவாமி இது? இப்படிக் கூறுகிறீர்களே... பசி எடுத்தால் சாப்பிடுவேன்... தூக்கம் வந்தால் தூங்குவேன்... என்கிறீர்கள். நீங்கள் செய்யும் காரியங்களில் எந்தத் தனித் தன்மையும் இருப்பதாகத் தெரியவில்லையே! என்றனர். "ஆமாம்! எந்தத் தனித் தன்மையும் கிடையாது அது தான் முக்கியம்'' என்றார் அவர்.

கேள்வி கேட்டவர்களுக்கு திருப்தி ஏற்படவில்லை. அதனால் மீண்டும் கேட்டனர் " என்ன இது, பசித்தால் உண்பது... தூக்கம் வந்தால் தூங்குவது இதை எல்லோரும் தானே செய்கின்றனர்'' என்றார்கள். இதைக் கேடடதும் ஞானி சிரித்தார். " எல்லோரும் தான் சாப்பிடுகின்றனர், தூங்குகின்றனர் என்று கூறுகின்றீர்கள். உணமைதான். இருந்தாலும் எனக்கும் அவர்களுக்கும் வேறுபாடு உண்டு.

நீங்கள் சாப்பிடும்போது உங்கள் மனம் சாப்பாட்டில் இருக்காது. நடந்த விஷயத்தையோ நடக்கப் போகும் விஷயத்தையோ நினைத்துக் கொண்டிருக்கும். உங்கள் மனம் அங்கும் இங்கும் அலைபாயும். எதையெதையோ நினைத்துக்கொண்டு அல்லது கதைத்துக் கொணடு சாப்பிடுவீர்கள். இல்லாவிட்டால் ஏதாவது கனவு கண்டுகொண்டிருப்பீர்கள்.

ஆனால் , நான் அப்படியல்ல. நான் சாப்பிடும்போடு சாப்பிட மட்டும்தான் செய்வேன். வேறு சிந்தனையே எனக்குக் கிடையாது. நீங்கள் சாப்பிடும்போது நீங்கள் அங்கே இருப்பதில்லை. நான் சாப்பிடும்போது நான் அங்கே இருக்கிறேன். தூங்கும்போது நீங்கள் தூக்கத்தில் இல்லை. கவலை, சிந்தனை, குழப்பம், கனவு இப்படி எங்காவது அலைகிறீர்கள். நான் அப்படியில்லை. தூக்கமென்றால் தூங்குகின்றேன் அவ்வளவுதான்.

எதைச் செய்கின்றேனோ நான் அதுவாகி விடுகின்றேன். அது என் இயல்பு. சாப்பிடும்போது நான் சாப்பாடாகி விடுவேன். தூங்கும்போது நான் தூக்கமாகி விடுகிறேன். இதுதான் மற்றவர்களுக்கும் எனக்கும் உள்ள வித்தியாசம் என்றார் அந்த ஞானி.

செய்வதைச் சரியாகச் செய்வதே யோகம் என்கிறது கீதை. நாம் செய்யும் தொழிலில் நாம் ஒன்றிப் போகும் போது அது தியானம் ஆகிறது. செய்யப்படுவது முழுமையாக அமைந்துவிடுகிறது. அதுமட்டுமல்ல செய்யும் தொழிலின் சுமை துன்பம் எதுவும் இல்லாமல் போய் விடும்.

இத்தகவலைக் கேட்டுவிட்டு எனக்குத் தெரிந்த நாடக நடிகர் ஒருவர் கூறினார் " நீங்கள் கூறுவது போல் தான் சார் நான் எதைச் செய்கின்றோனோ அதுவாகி விடுவது என் வழக்கம். நான் எந்த வேஷம் போட்டுக் கொண்டு மேடையில் வந்து நின்றாலும் ரசிகர்கள் கைதட்ட ஆரம்பித்துவிடுவார்கள். நிறுத்தவே மாட்டார்கள்'' என்றார். "அது எப்படி?'' என்றேன். "ஆரம்பத்திலேயே நான் கூறிவிடுவேன். நீங்கள் கைதட்டலை நிறுத்தினால் நான் நடிக்க ஆரம்பித்துவிடுவேன் என்று. அதைக் கேட்டதும் அவர்கள் நிறுத்தாமல் தட்ட ஆரம்பித்துவிடுவார்க்ள் சார்'' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சட்டவிரோத மின்சார பாவனை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனைக்குச் செல்லும் வீதியில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறுவோர் தொகை அதிகரித்து வருவதாகத் தெரியவருகின்றது.

இதனால் ஏனையவர்கள் முழுமையான மின்சார வசதியினைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்களால் தெரிவிக்கப்படுகிறது. (தி-75)

# ஜனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கை இனங்களைத் தாக்கும் செயற்பாடு

### சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான அமைப்பு கண்டனம்

(கொழும்பு)

பாராளுமன்றக் கலைப்பைத் தொடர்ந்து அமைசசர்கள மற்றும் பிரதி அமைச்சர்கள் ஆகியோரைப் பதவி நீக்கம் செய்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அதிரடி நடவடிக்கைகள் ஓர் முறையற்ற செயலென கொழும்பிலுள்ள சமாதானத்திற்கும் ஜனநாயகத்திற்குமான அமைப்பு கண்டனம் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியின் முறையற்ற செயற்பாடுகள் குறித்து தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்கும் வகையில் இவ் அமைப்பு வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைப்பின் சார்பில் சுனில் ஸ்ரீவர்த்தன, வாசுதேவ நாணயக்கார மற்றும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண ஆகியோரின் கையொப்பமிடப்பட்டு இவ் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது தொடர்ச்சியான நடவடிக்கைகள மூலம் நாட்டு மக்களுக்குப் பெரும் துன்பச் சுமைகளை ஏற்படுத்தியுள்ளார். வடக்கு-கிழக்கு உட்பட தெற்குப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு வழங்கபபடும் சேவைகளில் பெருமளவு முறிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதனால், அப்பகுதியிலுள்ள மக்கள் தமக்குரிய சேவைகள் வழங்கப்படுவதில் ஏற்பட்டுள்ள முறிவுநிலை காரணமாகப் பெரும் மனக்கவலை அடைந்துள்ளனர். ஜனாதிபதியின் இவ்வாறான செயற்பாடுகள் இலங்கையின் சமூகத் தூண்களைத் தாக்கும் ஓர் பாரிய செயலாகும்.

அத்துடன், அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையில் தோன்றியுள்ள முரண்பாடுகள் விரைவில் களையப்படவேண்டும். இதன் போதே மீளவும் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கபபடும் என அவ்வறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (தி-18)

# எந்தக் கட்சிக்கு என்றாலும் மக்கள் தெளிவான ஆணையை வழங்க வேண்டும்

### மாத்தறைக் கூட்டத்தில் ஜனாதிபதி உரை

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தலில் தனது கட்சிக்கோ அல்லது ஐ.தே. முன்னணிக்கோ தெளிவான ஆணையை வழங்குமாறு ஜனாதிபதி பொதுமக்களைக் கோரியுள்ளார். பிரதமருடன் சமரசம் மேற்கொள்வது சாத்தியமற்றதென உணர்ந்த பின்னரே இக்கோரிக்கையை விடுப்பதாக ஜனாதிபதி கூறினார்.

மாத்தறையில் சுதந்திரக்கட்சிக் கூட்டத்தில் பேசும்போது ஜனாதிபதி இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் குறைந் தளவான பெரும் பான்மையைக் கோரவில்லை. மக்கள் பணத்திற் காகக் கடசியைக் காட்டிக்கொடுக் காமல் எமக்குத் தெளிவான பெரும் பான்மையை அளிக்க வேண் டும்.

அத்துடன், நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு நாம் உறுதி பூண்டுள்ளோம். மேலும் இனப் பிரச்சினைக்குப் பேச்சு மூலமான தீர்வும், பொருளாதாரத்தைச் சரியான பாதையில் கொண்டு வருதலும் அவசியம். தெளிவான மக்கள் ஆணையின்றி இதனை நிறைவேற்ற முடியாது என்று கூறிய ஜனாதிபதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை தொடர்பாகக் கருத்துவெளியிடுகையில்,

இத்தீர்மானம் நீண்ட கலந்துரையாடலின் பின்னரே எடுக்கப்பட்டது. பிரதமர் உட்பட சம்பந்தப்பட்ட சகல கட்சியினருடனும் கலந்துரையாடியிருநதேன். ஆனால் பாராளுமன்றம் கலைப்பது என்ற முடிவு எவருக்கும் தெரியாது என்றார்.

மேலும், இந்நாட்டு மக்களுக்கும் எனக்கும் விருப்பமில்லாத விடயம் இன்னொரு தேர்தலே. ஆனால, பேசிய பாது காப்பு இடருக்குள்ளாகியுள்ளது என்ற காரணத்தினால் இது தவிக்கமுடியாததாகி விட்டது என்றார். தனது இரகசிய பதவிப் பிரமாணம் பற்றிக் கூறிய ஜனாதிபதி, தனது பதவி 2005ல் முடிவடையுமா அல்லது 2006 வரை தொடருமா என்பதைத் தானே தீர்மானிக்க வேண்டும் என்றார்.

இதேவேளை, கடந்த சுதந்திர தினத்தன்று ஜனாதிபதியும் பிரதமரும் புதிதாகத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளைப்போல் உரையாற்றிக் கொண்டிருந்ததைப் பார்த்தபோது, ஜனாதிபதி பாராளுமன்றைக் கலைப்பார் என்று நான் ஒரு போதும் நினைக்கவில்லை. ஆனால், அத்தினத்திற்கு ஓரிரு நாட்களின் பின்னரே பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. நான் ஜனாதிபதியை நன்றாக அறிவேன். அவர் சிரித்துப் பேசினால் அச்சிரிப்பின் பின்னால் ஏதாவது ஒழிந்திருக்கும் என மாத்தறைக் கூட்டத்தில் அனுரா பண்டாரநாயக்க உரையாறறினார். ஆனால் தனது சகோதரனின் பேச்சினை ஜனாதிபதிபொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. (த-6)

## இராசிபலன்

**18. 02. 2004**

**(மாசி 06, புதன்கிழமை)**

| | | |
|---|---|---|
| திரயோதசி | மாலை 6.23 | மணிவரை |
| உத்தராடம் | பிற்பகல் 4.09 | மணிவரை |
| இராகுகாலம் | 12.32-2.02 | மணிவரை |
| சுபநேரம் | 5.02-6.32 | மணிவரை |

*பிரதோச விரதம்*

*மகா சிவராத்திரி விரதம்*

**மேடம்**
தொழல் நன்மை, நிலைமாற்றம், அதிகாரம், காரிய அனுகூலம்.

**இடபம்**
சரீரப பிரயாசை, எதிர்பாராத செலவு, முயற்சி தாமதம், கட்டுப்பாடு.

**மிதுனம**
உறவினர் வெறுப்பு, சிந்தனை மிகுதி, திடீர் நன்மை, பிரயாணம்.

**கடகம்**
சௌக்கிய விருத்தி, குடும்ப மகிழ்ச்சி, கலந்துரையாடல், தன லாபம்.

**சிங்கம**
தெளந்த சிந்தை, பகைவர் நேசம், எடுத்த காரியம் கைகூடும், தேக நலன்.

**கன்னி**
குடும்பக் கவலை, பிரயாணக் கஷ்டம், காரிய தாமதம், வியாபார முயற்சி.

**துலாம்**
உடல் நலக் குறைவு, மனச் சஞ்சலம், முயற்சி தாமதம், மாதா சுகம்.

**விருச்சிகம்**
கூட்டு முயற்சி அன்னியர் சந்திப்பு, நல்ல செய்தி, உற்சாகம்.

**தனுசு**
தன நாசம், முயற்சி தாமதம், கௌரவக குறைவு தொழில் கஷ்டம்.

**மகரம்**
கற்பனை மிகுதி, இனசன தொடர்பு, போசன நன்மை, காரிய அனுகூலம்.

**கும்பம்**
சயனசுகக் குறைவு, காரிய அலைச்சல், எதர்பாராத நன்மை, போசன சுகக்குறைவு.

**மீனம்**
புகழ், தடைப்பட்ட காரியம் கைகூடும், பிறர் உதவி, புதிய பொருள் சேர்க்கை.

**(ப்ழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

**- வளவன்.**

## இந்து கலாசார திணைக்களத்தின் சிவராத்திரி விழா ஆவரங்காலில்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் மகா சிவராத்திரி விழா இன்று புதன்கிழமை ஆவரங்கால் சிவன் கோவில் சிவசக்தி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், முன்னாள் இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

அன்றைய தினம் பிற்பகல் 4.00மணிக்கு புத்தூர் சிவன் கோவிலில் இருந்து நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் சிவ நாம பஜனையுடன் பொதுமக்கள் ஊர்வலமாகப் புறப்பட்டு ஆவரங்கால் சிவன் கோவிலை வந்தடைவர்.

அதனைத் தொடர்ந்து சிவராத்திரி விழா நிகழ்வுகள் சிவசக்தி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (தி)

# சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவின் மனு தள்ளுபடி

(சென்னை)

வருவாய்க்கு மீறிய சொததுக் குவிப்பு வழக்குகளின் விசாரணையை கர்நாடகத்தில் இருந்து வேறு ஒரு மாநிலத்துக்கு மாற்றக் கோரி ஜெய லலிதா தாக்கல் செய்துள்ள மனுவை உச்ச நீதிமனறம் நேற்றுத் தள்ளுபடி செய்தது.

நீதிபதிகள் எஸ்.எம். வரியவா, எஸ்.கே. கேமா ஆகியோரைக் கொண்ட நீதிபதிகள் குழு உயர் நீதிமன்றத்தின் உத்தரவை மாற்றுவதற்கு உகந்த காரணம் எதுவும் ஜெயலலிதாவின் மனுவில் கூறப்படவில்லை என்று கூறியுள்ளது.

இந்த வழக்கின் விசாரணையை தமிழ் நாட்டிலிருந்து வேறொரு மாநிலத்துக்கு மாறற வேண்டும் என்று தி.மு.க பொதுச் செயலாளர் அன்பழகன் தாக்கல் செய்த மனுவை அடுத்து உயர் நீதிமன்றம் இவ்வழக்குளைக் கர்நாடகத்துக்கு மாற்ற உத்தரவிட்டது.

கர்நாடகததுடன் தமிழகத்துக்கு காவிரி நதிநீர்ப் பிரச்சினை காரண மாக சுமுக நிலை இல்லாததால் பெங்களூரில் விசாரணை நியாய மாக சுதந்திரமாக நடைபெறவாய்ப் பில்லை என்றும், தமக்குப் போதிய பாது காப்பு இருக்காது என்றும் கோரி ஜெயலலிதா இவ்வழக்கு களை வேறு மாநிலங்களுக்கு மாற்ற மனுத் தாக்கல் செய்திருந் தார்.

சொத்துக்குவிப்பு குற்றச்சாட்டு வழக்கு சம்பந்தமாக கர்நாடக நீதி மன்றம் தனது கடமையைச் சட்டத தின்படி நிறைவேற்றும் என்பதில் தமக்கு எந்தவித சந்தேகமும் இல்லை என்று நீதிபதி கேமா தீர்ப்பில் கூறியி ருக்கின்றார்.

சென்னையில் தனி நீதிமன்றத் தில் நடைபெற்று வந்த இரண்டு சொத்துக்குவிப்பு வழக்குகளைக் கர்நாடகத்துக்கு மாற்ற உயர் நீதி மன்றம சென்ற நவம்ர் மாதம் உததர விட்டது தெரிந்ததே. (து-9)



புதுடில்லியில் நடைபெற் று வரும் உலக புத்தக கண்காட்சியை மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் முரளி மனோகர் ஜோஷி குத்து விளக்கேற் றி துவக்கி வைத்தார்.

# இந்திய-பாக். பேச்சுவார்த்தையில் அனைத்துப் பிரச்சினைகளும் ஆராயப்படும்

## யஸ்வந் சிங்ஹா அறிவிப்பு

(புதுடில்லி)

இஸ்லாம பாத்தில் இந்தியபாக் கிஸ் தான் அதிகாரிகளிடையே நேற்று முன்தினம் தொடங்கியுள்ள மூன்று நாள் பேச்சுவார்த்தைகள் நல்ல பயன்தருமென்று இந்தியா நம்பிக்கை தெரிவித்திருக்கிறது.

இந்தப் பேச்சுக்களின முடிவை யொட்டியே விபரமான பேச்சுக்களுக் கான நேரமும் விவாதப்பட்டியலும் தயாரிக்கப்படுமென்று புதுடில்லி கூறியுள்ளது.

நேற்று முன்தினம் டில்லியில் நடைபெற்ற இந்திய-ஐரோப்பிய யூனியன் அமைச்சர்கள் மட்டக் கூட டத்துக்குப் பிறகு செய்தியாளர் களி டம் பேசிய ஜஸ்வந் சிங்ஹா, இந்திய -பாக்கிஸ்தான் பேச்சுக் களல் ஐரோப பிய யூனியனோ மூன்றாவது தரப்பு எதுவோ சமசர முயர்சிகளில் இறங்க வாய்ப்பில்லை யென்று உறுதிப டக் கூறினார்.

இது இரு தரப்புப் பிரச்சினை; இரு தரப்புக்களும் கூடிப் பேசித் தீரவு காணும் என்றார் சிங்ஹா. நேற்று முன்தினம் இஸ்லாமபாத்தில் இந்திய-பாகிஸ்தான் வெளியுறவு அதிகாரிகளிடையே தொடங்கிய பேச்சுகளில் சில முக்கிய யோசனை கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

ஜம்மு-காஷ்மீர உட்பட நிலுவை யிலுள்ள அனைத்துப் பிரச்சினை கள் குறித்தும் விரிவான இரு தரப் புப் பேச்சுக்களை மீண்டும் தொடங்கு வதற்கான கால அட்டவணை, மற் றும் வழிவகைகள் பற்றித் தீர்மானி க்க இஸ்லாம பாத்தில் இன்று வரை இந்தப பேச்சுக்கள் நடை பெறும்.

இப்பேச்சுக்கள் சுமுகமான சூழ் நிலையில் ஆக்கபூர்வமான விதத் தில நடைபெற்றதாக பாக்கிஸ்தான் செய்தித் தொடர்பாளர் மசூர்கான் தெரிவித்தார். (து)

# ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள்: புலனாய்வு அறிக்கை திரிபு படுத்தப்பட்டதா என அவுஸ்திரேலியா விசாரணை

(கான்பரா)

ஈராக் மீது போர் தொடுக்கும பொருட்டு எந்தவொரு காரணத்தை யும் அவுஸ்திரேலிய அரசாங்கம், திரிபுபடுத்தியதற்கான ஆதாரங் கள் எதுவும் இல்லையென அந் நாட்டு வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் டௌனர் கூறியுள் ளார்.

ஈராக்கில் பேரழிவுகளை எற்படுத் தும் ஆயுதங்கள் தொடர்பாக நடத் தப்பட்ட சோதனைகள் குறித்து தயாரிக்கப்பட்ட புலனாய்வு அறிக் கைகள் திரிபுபடுத்தப்பட்டனவா என்பது பற்றி அவுஸ்திரேலிய பாராளு மன்றம் விசாரணைகளை நடத்தி யது.

இதனைத் தொடர்ந்தே வெளி விவகார அமைச்சர் இந்தக் கருத் தைத் தெரிவித்துள்ளார்.


ஈராக்மீது கடந்த வருடம் அமெரி க்கத் தலைமையில் போர் தொடுக் கப்பட்ட போது அந்தப் போரில முத லாவதாக இணைந்து கொண்ட நாடு களில் அவுஸ்திரேலியாவும் ஒன் றாகும்.

போருக்குத் தேவையான 2 ஆயிரம் படைவீரர்களை அவுஸ்தி ரேலியா ஈராக்குக்கு அனுப்பிவைத திருந்தது.

எவ்வாறாயினும் போரின் மூலம் சதாம்ஹுசைன் ஆட்சி கவிழ்க்கப் பட்டு 10 மாதஙகள் கழிந்த பின்னரே ஈராக்கில் உயிரி அல்லது இரசாயன ஆயுதஙகள் எதுவும் கண்டுபிடிக்கப் படவில்லை எனவும் இதன் காரணமாக ஈராக் மீது போர்தொடுத்த நாடுகள் திரிபுபடுத்தப்பட்ட அறிக்கைகளைத தயாரித்ததாக பல்வேறு விமர்சனங் கள் எழுப்பப்பட்டன.

இதனை அடுத்து தத்தமது நாடு களில் விசாரணைகளை நடத்து வதற்கு அமெரிக்காவும் பிரிட்டனும் முன்வந்திருந்தமை குறிப்பிடத்தக் கது. (து-9)

டோக்கி யோவில் உள்ள நூலகம் ஒன் றில் தனது உரிமை யாளருடன் சேர்ந்து புத்தகம் படிக்கும் பூனை



# பொது தேர்தலில் கடும் போக்குடையவர்கள் பாராளுமன்ற பலத்தை கைப்பற்றுவதை அனுமதிக்கக்கூடாது - ஈரான் வலியுறுத்து

(தெஹ்ரான்)

எதிர்வரும்20ல் பொதுத் தேர்த லில் கடும போக்குடையவர்கள் பாராளு மன்ற பலத்தைக் கைப் பற்றுவதை அனுமதிக்கக் கூடாது என ஈரானிய ஜனாதிபதி மொஹமட்கடாமி நாட்டு மக்களுக்கு வலியுறுத்தியுள்ளார்.

நியாயத்துக்கு புறம்பான வகை யில் நடைபெறவுள்ள இந்தத் தேர் தலின் மூலம் கடும் போக்குடைய வர்களுக்கு நாட்டு மக்கள் உரிய பாடம் புகட்ட வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

2 ஆயிரத்து 500 க்கும் மேற் பட்ட சீர்திருத்தவாத வேட்பாளர் கள் தேர்தலில் போட்டியிடுவதற்கு கடும் போக்குடைய பாதுகாவலர் பேரவை தடை விதித்திருந்தது.

இதேவேளை இந்தத் தேர்தலுக்கு பலத்து எதிர்ப்புக் கிளம்பியுள்ள நிலையில் ஜனாதிபதி கடாமியின் சகோதரர் மொஹமட் ரெஸாகடா மியின் தலைமையிலான இஸ் லாமிய, ஈரான் பங்காளி முன்னணி உட்பட சீர்திருத் தவாதக் கட்சிகள் பல தேர் தலைப் பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ளன. (து)



கடந்த 14ந் திகதி காதலர் தினம் உலகம் முழுவதும் கொண் டாடப்பட்டது. ஆக்லாந்தில் உள்ள உயிரியல் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வரும் மனிதக் குரங்கு ஒன் று தனது காதலிக்கு கொடுப்பதற்காக வைத்திருந்த பூங்கொத்து.

# பாஜகவின் ஆட்சிமன்றக் கூட்டம் பிரதமர் தலைமையில் கூடியது

(சென்னை)

மக்களவைத் தேர்லுக்கான வேட் பாளர்கள் தேர்வை அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்குள் முடித்து விடு மாறு பா.ஜ.கட்சியின் மாநில நிர் வாகிகளைக் கட்சித் தலைமை கேட்டுக் கொண்டுள்ளது.

பிரதமர் தலைமையில் நடை பெற்ற பா.ஜ.க ஆட்சி மன்றக் கூட் டத்துக்கு பின் செய்தியாளர்களிடம பேசிய கட்சியின் பொதுச் செயலர் பிரமோத் மகாஜன் இதைத் தெரி வித்தார்.

தமிழ் நாட்டில் பா.ஜ.க, அ.தி.மு.க போட்டியிடும் தொகுதி கள் குறித்து அடுத்த இரு தினங் களில் முடிவு செய்யப்படுமென்று அவர் கூறினார்.

பா.ஜ.க, அ.தி.மு.க தொகுதிப் பங்கீடு தொடர்பாக ஜெயலலி தாவுடன் நடந்த பேச்சுக்களின் விப ரங்கள் விவாதிக்கப்பட்டதாக மகாஜன கூறினார்.

பிற மாநிலங்களில் பா.ஜ.கட்சி யின் நிலைப்பாடு குறித்தும் கூட் டத்தில் விவாதிக்கப்பட்டது.

தமிழ் நாட்டில்அ.தி.முகவுடன் தொகுதிப் பங்கீடு குறித்து விரை வில் சுமுக முடிவு ஏற்படுமென்று பா.ஜ.கட்சியின் அகில இந்தியச் செயலர் இல. கணேசன் தெரிவித் தார்.

சென்னையில் செய்தியாளர் களிடம் பேசிய அவர் விரைவில் நடைபெறும் பா.ஜ.கட்சியின் ஆட்சி மன்றக் குழுக் கூட்டத்தில்இதற் கான முடிவு எடுக்கப்படுமென்றார். (து)

# நிதி மோசடி விசாரணைகள் நிரூபிக்கப்பட்டால் பதவி விலகத் தயார் கனேடிய பிரதமர்

(ஒட்டாவா)

அரசாங்க நிதி மோசடி பற்றிய விடயங்களை ஏற்கனவே தான் அறிந் திருந்ததாக விசாரணைகள் மூலம் நிரூபிக்கப்பட்டால், தனது பதவியை இராஜினாமாச் செய்யத் தயாராக இருப்பதாக கனேடியப் பிரதமர் போல் மாட்டீன் தெரிவித்துள்ளார்.

கனேடிய அரசாங்க அதிகாரிகள் 76 மில்லியனின் அமெரிக்க டொலர் கள் நிதி மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் விடயம் குறித்து தாம் அறிந்திருக்கவில்லையென மாட் டீன் கூறியுள்ளார். இவ்விடயம் தொடர்பாக ஏற் கெனவே அறிந்திருந்த தாக விசா ரணைகள் மூலம் நிருபக்கப் பட் டால் பதவி விலகுவீர் களா எனச் செய்தியாளர்கள் கேட்ட போது தாம் நிச்சயமாக பதவியை விட்டு விலகி விடுவேன் என மாட்டீன கூறி யுள்ளார்.1997 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டுவரை மாட் டீன் நிதியமைச் சராக இருந்த காலபபகுதியில் இந்த நிதிமோசடி இடம்பெற்றுள்ளமை கடந்த வாரம் கண்டு பிடிக்கப்பட் டுள்ளது.

பிரதமர் ஜீன்ரேஷன் பதவி வில கியதன் பின்னர் கடந்த டிசம்பர் மாதம் பிரதமராகப் பதவியேற்ற போல் மாட்டீன் இந்த நிதிமோசடி சமபந்தமாகப் பகிரங்க விசாரணை நடத்தப்பட வேண்டுமென உத்தர விட்டுள்ளதுடன், குற்றவாளிகளா கக் காணப்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கூறியுள்ளார். (து-9)

# கல்வித்துறையினரும் நேர முகாமைத்துவமும்

நேரம் மிகவும் பெறுமதி வாய்ந்தது. அதற்குப் பெறுமதி கூறுவது கடினம். நேரத்தைச் சேமிக்கவோ, அதை நறுத்திவைக்கவோ முடியாது. அதனை இழந்தால் இழந்ததாகவே இருக்கும். நேரம் எப்போதும் ஓடிக் கொண்டிருக்கும். அதைத் திட்டமிட்டுப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கல்வித் துறையிலோ அல்லது வேறு எந்தத் துறையிலோ பணிபுரியும் சகலரும் நேரத்தைக் கவனமாகப பயன்படுத்துவதன் மூலமே நிறுவனத்தை வெற்றியுடையதாக்கலாம். எமது அனுபவத்தில் பாடசாலைகளில் எவ்வளவோ நேரம் வீணாக்கப்படுவதை அவதானித்துள்ளோம். பாடசாலை ஒன்றில் ஒரு பாடவேளைக்கு ஓர் ஆசிரியர் சமுகமளிக்காவிடின் அவரது வகுப்பில் உள்ள ஏறக்குறைய 40 மாணவர்களின் 40 பாடவேளைகள் வீணாகியதற்குச் சமன். அவ்வாறு 5 ஆசிரியர்கள், ஆசிரியர்களதுஅறையில் அமர்ந்து கொண்டு வகுப்பிற்குச் செல்லாது உரையாடிக்கொண்டிருப்பார்களாயின் மாணவர்களின் 200 பாடவேளைகள் வீணாகிவிடும். இவ்வாறு நேரம் வீணாக்கப்படுவதால் பாடசாலையின் முன்னேற்றம், மாணவர்களின் கல்வியறிவு என்பவற்றைப் பாதிப்பது மட்டுமன்றி, ஆசிரியர்களது தொழில் ஒழுக்காற்றையும் நாட்டின் தேசிய அபிவிருத்தியையும் பாதிக்கின்றது.

**நேரத்தைப் பயனுடையதாக்கும் வழிமுறைகள்**

★ பாடசாலைச்சூழல், வகுப்பறை என்பன போதிய வெளிச்சம், காற்றோட்டம், சத்தம் சந்தடியின்றியித்தல்.

★ ஒரு நேரத்தில் ஒரு வேலையை மட்டும் செய்வதன் மூலம் கவனச் சிதைவைத் தடுக்கலாம்.

★ ஒவ்வொரு பணிக்கும் ஒரு முடிவுத் திகதியைத் தீர்மானித்துக் கொள்வது பணி உரியவேளைக்குப் பூர்த்தியடைவதை உறுதிப்படுத்தும்.

உ-ம்:- மாணவர் அனுமதி, நேர அட்டவணை, வருடாந்த அமுலாக்கத் திட்டம்.

★ பாடசாலைகளில் தேவையற்ற தலையீடுகள் தவிர்க்கப்படுவதன் மூலம் அதிபர்களின் பணியை விரைவுபடுத்தலாம்.

★ தொலைபேசிப் பாவனையைத் திட்டமிட்டுக் கொள்வது.

★ அதிபர்கள், ஆசிரியர்கள் தமது பணியை முன்னுரிமை அடிப்படையில் நிரற்படுத்திச் செய்தல்

★ அதிபர்கள், முகாமைத்துவக் குழுவினர், ஆசிரியர்கள் ஆகியோர் பிரதான விடயங்களைப் பின்போடாது செய்து முடித்தல்.

★குறிப்பெடுத்தல், தனக்கெனச் சுயமான சுருக்கெழுத்து முறையொன்றை விருத்தியாக்கல், தலைப்புக்களை உபயோகித்தல், கீழ்க்கோடிடல், நட்சத்திரக் குறியீடுகளை உபயோகித்தல் போன்றவற்றைக் கடிதங்கள், அறிக்கைகள், சுற்றுநிருபங்கள், நூல்கள் என்பவற்றை வாசிக்கும்போது பயன்படுத்த வேண்டும். இவை நேரத்தை மீதப்படுத்த உதவும்.

★ எதிர்பார்த்த விளைவுகள், அடைவுகள் என்பவற்றை உள்ளடக்கிய சுய மதிப்பீட்டைச் செய்தல் குறைபாடுகளைத் தீர்க்க உதவும்.

★ ஒரு வேலையின் முடிவுத் திகதியை முன்கொண்டு செல்வதால் வேலை செய்துமுடிக்கக் கூடிய உணர்வு மேலிடுகிறது. (பாக்கின்சன் விதி) இதைப் பயிற்சியில் கொண்டுவருவது முகாமையாளர்கள் அனைவருக்கும் நன்மை பயப்பதாக இருக்கும்.

**நேரப் பயன்பாட்டுக்கான திட்டகள்**

திட்டமிடலில் முதலில் இலக்குகளைத் தீர்மானிக்க வேண்டும். பின்னர் இலக்குகள் அடிப்படையில் தட்டங்கள் தயாரித்தல் வேண்டும. அதனை கண்காணிக்க வேணடும். அதனை நெறிப்படுத்த வேண்டும். இறுதியில் மதிப்பீடு செய்தல் அவசியம். நேரத்தைத் திட்டமிட்டு முகாமை செய்யும் விடயத்தில் பாடசாலை அதிபர்களின் நடத்தைகளிலிருந்து ஆசிரியர், மாண வர் ஆகியோர் நேர முகாமைத்துவத்திற்கான உதாரணங்கள், பாடங்கள் என்பவற்றைக் கற்க வேண்டும்.

**1.நாளாந்தத் திட்டம்**

★நாளாந்தத் திட்டமிடலுக்கு பெரிய நாட்குறிப்பேடு ஒன்றைப் பின்பற்றுதல் வேண்டும். ஒவ்வொரு தவணையும் தொடங்கு முன் பாடசாலையின் பிரதான நிகழ்ச்சிகளை எழுதிக் கொள்ள வேண்டும். அதாவது நிகழ்ச்சிகள், கூட்டங்கள், குழு நடவடிக்கை.

★ பாடநேரங்களைக் குறித்து வைத்தல்

★ ஒப்படைக்கப்பட்டிருக்கும் பணிகளின் முடிவுத் திகதிகள் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். முடிவுத் திகதி பற்றிய குறிப்பேட்டை காலையில் பார்க்கும் போது இன்று கட்டாயம் செய்ய வேண்டியவை. நேற்று செய்யாமல் விடப்பட்டவை, நாளை செய்யப்பட வேண்டியவை, இன்று செய்யக் கூடியவை என்பவற்றை கவனத்தில் கொள்ள முடியும்.

★ எதிர்பாராத நியமனங்கள், பணிகள் என்பவற்றைக் குறித்துக் கொள்ள சிறிய குறிப்புப் புத்தகத்தை உடன் வைத்திருத்தல்.

**2. வாராந்தத் திட்டம்**

பருமட்டான நேர அளவுத் திட்டத்திற்குள் வாரத்திற்குரிய வேலைத்திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். ஒவ்வொரு வார ஆரம்பத்திலும் அவ்வாரத்திற்குள் செய்து முடிக்க வேண்டியவை எவை என்பதைக் கவனிக்க வேண்டும்.

**3. மாதாந்தத் திட்டம்**

திட்டத்தின் முன் பகுதியில் அடைய வேண்டிய இலக்குகளைக் குறித்துக்கொள்ள வேண்டும். இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட திட்டம் அடைவதற்கு இலகுவாக இருக்கும்.

**4. வருடாந்தத் திட்டம்**

மாதாந்தத் திட்டங்களின் சுருக்கமாக இது அமையும். ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் செய்து முடிக்கப்படாத பணிகள் புதிய ஆண்டுக்கான நாட்குறிப்பேட்டிற்கு மாற்றப்பட்ட வேண்டும்.

**கடந்த காலத்தை மீளாய்வு செய்தல்**

நேர முகாமைத்துவத்தில் கடந்த காலத்தை மீளாய்வு செய்தல மிகப் பயனுள்ளதாகும். இதனை வாரம், தவணை, வருடம் என்ற கால அளவுகளில் செய்யலாம். அதிபர்கள், ஆசிரியர்கள் இவ்விதம் மீளாய்வு செய்யும் போது தத்தம் அனுபவங்களிலிருந்து நேரப் பயன்பாட்டிற்கான அனுபவங்களைப பெற்றுக் கொள்ளலாம். நேரப் பயன்பாடு, வீண்விரயம் என்பவற்றை மதிப்பிட்டு எதிர் காலத்தில் நேரப் பயன்பாட்டையும் உற்பத்தித் திறனையும் அதிகரிக்கலாம்.

ஒவ்வொரு வாரத்திலும் எவ்வளவு நேரம் ஒவ்வொரு செயற்பாட்டிலும் செலவழிக்கப்பட்டுள்ளது என்பது பற்றிய ஒரு மதிப்பீடு இருத்தல் வேண்டும். அதே வேளை எப்போதும் நேரத்தைப் பற்றி அலட்டிக் கொள்ளவும் கூடாது. அதாவது நேர வெறி பிடித்திருப்பதும் (**Time Fanatic**) கூடாது.

நாம் நினைப்பது அனைத்தையும் செய்வது சாத்தியமாகாது. ஆகையால் முன்னுரிமைகளை கவனித்தலும் அவசியம். அத்துடன் பின்வரும் வினாக்களை மீளாய்வின் போது பயன்படுத்தலாம்.

★ மேலும் எந்த எந்தப் பணிகளைப் பங்கிடலாம்?

★ எதிர்பாராத பணிகளை அல்லது பிரச்சினைகளை. சமாளிக்க நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதா?

★ ஏதாவது தலையீடுகளை நீக்க முடியுமா?

★ சொந்த வாழ்க்கை, தொழில் வாழ்க்கை என்பவற்றிக்கிடையே இடைவெளிவைக்கப்பட்டுள்ளதா?

★ வேலையைத் திறம்படச் செய்யும் பொருட்டு ஓய்வு எடுக்கப் படுகிறதா?

★ தினசரி வேலைத் திட்டம் (**Daily Dos**) பின்பற்றப்படுகிறதா?

**நேரத்தைத் திருடுபவை**

★ ஒழுங்குபடுத்தப்படாத கூட்டம்

★ திட்டமற்ற வேலை ஒப்படைப்பு

★ தீர்மானமின்மையும் தாமதமும்

★ நெருக்கடிகள், பிரச்சினைகள் என்பவற்றை முகாமை செய்தல்

★ தெளிவற்ற பொறுப்பு ஒப்படைப்பு

★ குறிப்பிட்ட பணிகளில் அதிக ஈடுபாடு கொள்ளல்

★ சுய கட்டுப்பாடு, ஒழுக்கமின்மை

★ சுய அபிவிருத்தியின்மை

★ பணியாற்றலில் முன்னுரிமை வழங்காமை

★ திட்டமற்ற தொடர்பாடல் என்பன பொதுவாக நேரத்தை பாடசாலைகளில் வீணாக்குகின்றன. இவை நேரத்திருடர்கள் எனவும் அழைக்கப்படலாம்.

**நேர முகாமைத்துவத்தில் தகவல் தொழில் நுட்பத்தின் பயன்பாடு**

பாடசாலையில் உள்ள மூன்று முகாமை மட்டங்களான தந்திரோபாய முகாமை (**Stra tegical Management**), **Tuctical Management** செயற்பாட்டு முகாமை (**Operation Management**) ஆகியவற்றின் செயற்பாட்டை இலகுபடுத்தி வரைவுபடுத்துவதில் தகவல் தொழில் நுட்பம் பெரிதும் பயன்படுகிறது.

அதிபா மற்றும் முகாமைத்துவக் குழுவினின் திட்டமிடலுக்குத் தேவையான தரவுகள் (பால், மொழிப் பிரிவு, எண்ணிக்கைகள்) உப அதிபர், பிரிவுத்தலைவர் தேவையான தரவுகள், நாளாந்த நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றுக்கான தரவகளை தகவல்முறைமையின் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும். மேலும் ஆசிரியர், மாணவர்களுக்கு தகவல் தொழில் நுட்ப முறை பெரிதும் பயன்படுகிறது.

★ கணித்தல் (**Computing**)

★ அலுவலகத்தை தன்னியக்கப்படுத்துவது (**Paper Less Office**)

★ அறிக்கைப் படுத்தல் (**Reporting**)

★ அலுவலக ஆதாரா உதவிகள் (**Executive Support**)

★ ஒப்பிட்டு நன்மைகள் (**Competitive advantages**)

மேற்படி தகவல் தொழில் நுட்பத்தின் பயன்பாட்டின் மூலம் நேர விரயம் தவிர்க்கப்படுவதுடன், கணனியில் இருந்து அதன் பாவனைக்கால உச்சப் பயனையும் பெற்றுக் கொள்ள முடியும்.

எஸ்.ஆர்.சத்தியேந்திரா

இயற்கையான ஆற்றலும் சக்தியும் தலைமைத்துவத்தின் பிரதான மூலங்கள் எனக் கூறப்படுவது வழக்கம். அவை நிச்சயம் உதவியானவை. எனினும் அவை இல்லாத விடத்தும் விவேகமான முறையில் நேரத்தைப் பயன்படுத்துவதால் அவற்றை ஈடுசெய்யாமல் மேற்கொள்ளப்பட்ட நேரப் பயன்பாட்டு நுட்பங்கள் கடைப் பிடிப்பதற்கு கூடிய நேரம் எடுப்பதை சில நுட்பங்கள் அனுபவங்களாலே வரக்கூடியன. இதில் எடுக்கும் முயற்சி நிச்சயம் வெற்றி அளிக்கும். நேரத்தை சிறப்பாகப் பயன்படுத்துவதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தமுடியும்

"உனது நேரத்தை சிறந்த முறையில்
உபயோகிக் கூடிய மனிதன்நீயே"


## மரண அறிவித்தல்

### திரு.பொன்னையா சண்முகராசா

அவர்கள்

(ஓய்வுபெற்ற தபால் திணைக்கள அலுவலர், G.P.O. - Colombo)

அளவெட்டி கேணிக்கரையைப் பிறப்பிடமாகவும், துர்க்காபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு பொன்னையா சண்முகராசா அவர்கள் 17.02.2004 சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலம் சென்ற பொன்னையா அன்னம் தம்பதிகளின் அருமை மகனும், காலம் சென்ற அப்பாக்குட்டி தையல்பிள்ளை அவர்களின் மருமகனும், பொன்மணியின் அன்பு கணவரும் உமாசுதன் (திருமகள் அழுத்தகம் - சுன்னாகம்), பாமதி(தேசிய சேமிப்பு வங்கி - சுன்னாகம்), ரேவதி (ஆசிரியர் யா/கட்டுவன்புலம் மகாவித்தியாலயம்), செந்தூரன் (அம்பாள் - தொலைத்தொடர்பு நிலையம்), ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஞானேஸ்வரன் (இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்) , கணேசலட்சுமி(ஆசிரியை- யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி), சுகன்யா ஆகியோரின் அன்பு மாமனாரும், கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாகுட்டி, செல்வி கனகம்மா அப்பாகுட்டி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிருந்தா, கபிலன், உமையாள், உமாபாரதி ஆகியோரின் அன்புப் பேரனும் சிவஞானம், செல்வ நாயகம், குணரத்தினம், சிவபாலன், காலம் சென்ற மகேந்திரபாலன், அருணகிரிநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 18.02.2004 புதன் கிழமை காலை 9.00மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று கட்டுப்பிட்டி ம யானத்துக்கு எடுத்துச் சென்று தகனம் செய்யப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

**துர்க்காபுரம், மல்லாகம்.** (8262) **தகவல் மனைவி, பிள்ளைகள்.**


# இலங்கையின் இனப்பிரச்சினை அரசியலில் சிக்குண்டுள்ளது

## பிரதமர் ரணில் கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

இரு தசாப்தகாலமாக இலங்கையில் நிலவிவந்த யுத்தம் அரசியல் காரணங்களாலேயே இன்னமும் தீர்க்கப்படாதிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கவலை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் களனி ரஜமகா விகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், யுத்தத்திற்கு அடிப்படையாக அமைந்த காரணிகளை இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1950 ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசியல் இனப் பிரச்சினைக்குள் சிக்கிக்கொண்டுள்ளது. இதன் காரணமாகவே இனப்பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கின்றது.

இதுவரைகாலமும் யுத்த அழிவுகளை எவரும் புரிந்து கொள்ளாததால் யுத்தம் நீண்டு கொண்டே செல்கிறது.

விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்தம் ஏற்பட்டபின் தற்போது அழிவுகள் குறைந்துள்ள போதிலும், இலங்கையின் பொருளாதாரம் சீர்குலைந்து விட்டது.

எனவே, புத்தரின் தர்ம போதனைகளை நினைவு கூர்ந்து யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த முயல வேண்டியது அவசியமானது.

இதனால்தான் கடந்த இரு வருடங்களாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் பேச்சுவார்த்தைகளை நடத்திவந்தோம்.

ஆனால், இவையனைத்தையும் முறியடிக்கும் வகையில் ஜனாதிபதி ஈடுபட்டு, அதை நிறைவேற்றியும் விட்டார். அத்துடன் நாட்டின் பொருளாதாரத்திலும் இத் தேர்தல் மூலம் பெரும் பின்னடைவு ஏற்படப்போகிறது என்றார்.

(தி)

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு. -குறள்

வலம்புரி

## சமாதானத்தைக் குழப்பும் முரண்பட்ட கருத்துக்கள்

இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட வேண்டும். ஜனாதிபதி ஆட்சி முறையினால் இந்த நாட்டிற்குப் பேராபத்து உண்டு. இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியை நிலை நிறுத்துவதற்காக ஜே.ஆர்.ஜயவர்த்தனாவினால் கொண்டு வரப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை பிழையான ஒருவரிடம் போய்ச் சேருமாக இருந்தால் அதனால் நாட்டிற்குப் பேராபத்து ஏற்படும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா எச்சரிக்கை செய்துள்ளார்.

இரண்டு தடவைக்கு மாறாக மூன்று தரம் சத்தியப் பிரமாணம் செய்து தனது பதவிக் காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீடித்துக் கொள்ள முயற்சிக்கும் ஜனாதிபதி ஒருவர் அந்தப் பதவி நாட்டிற்கு ஆபத்தானது எனக் கூறுவது அதிர்ச்சி தருவதாக உள்ளது.

ஜனாதிபதிப் பதவியில் இரண்டு தடவைகள், அதாவது பன்னிரண்டு வருடங்கள் மட்டுமே ஒருவர் இருக்க முடியும். அந்த இரண்டு தடவைகளும் நிறைவுறும் போதே ஜனாதிபதிப் பதவி ஆபத்தானது என்ற உண்மையை சந்திரிகா குமாரதுங்கா அவர்கள் உணர்ந்துள்ளார்.

இந்த உணர்வு இனிமேல் ஜனாதிபதியாகத் தான் பதவி வகிக்க முடியாது என்பதால் ஏற்பட்டதா? அல்லது எதிர்காலத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு ஜனாதிபதியாகும் சந்தர்ப்பம் உண்டு என்பதால் ஏற்பட்டதா? என்பதை பொது மக்களே தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

எதுவாயினும், தன்னோடு ஜனாதிபதிப் பதவிக்கு முடிவு கட்டுவதன் மூலமே, தனது கட்சியைக் காப்பாற்றிக்கொள்ள முடியும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கருதுகின்றார்.

எனினும் ஜனாதிபதி ஆட்சிமுறையால் பல்வேறு சிக்கல்களையும், சிரமங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதி ஆட்சிமுறை பற்றி எதுவுமே கூறாமல் மௌனம்காத்து வருகின்றார்.

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு ஆதரவு வழங்குமாறு ஜனாதிபதி கோரிக்கை விட்டிருந்த போதிலும், அதற்குப் பிரதமர் ரணில் எதுவித பதிலையும் வழங்கவில்லை. சந்திரிகா குமாரதுங்காவிற்குப் பின்னர் அடுத்த ஜனாதிபதியாக வரக்கூடிய சந்தர்ப்பம் தனக்கே உண்டு என்ற நிலையில், ஜனாதிபதி ஆட்சியை ஒழிக்க பிரதமர் ரணில் விருப்பம் கொள்ளவில்லை. எதுவாயினும் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பது பற்றிய தீர்மானத்தை எதிர்வரும் தேர்தல் முடிவுகளின் பின்னரே பிரதமர் ரணில் தீர்மானிக்கப் போகின்றார்.

அதாவது எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் வெற்றி கொள்ளுமாக இருந்தால், ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக்கு பிரதமர் ஆதரவு வழங்கமாட்டார். மாறாக ஐக்கிய தேசிய முன்னணி தோல்வியடையுமாக இருந்தால், ஜனாதிபதி ஆட்சியை ஒழிப்பதற்கு பிரதமர் ரணில் ஆதரவு வழங்குவார் என்பது ஊகிக்கப்பட வேண்டியவையாகும்.

இவை ஒருபுறம் இருக்க, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான அதிகாரத்தை ஒன்று என்னிடம் தாருங்கள் அல்லது பிரதமர் ரணிலிடம் கொடுங்கள் என்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் பலமின்றி எதனையுமே செய்ய முடியாதென்பது அவரின் கருத்து. இக்கருத்து நியாயமானதாயினும் நாம் ஆட்சிக்கு வந்தால் பிரதமர் ரணில் விடுதலைப்புலிகளுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்துச் செய்வோம் என ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அவ்வாறாயின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் அதிகாரத்தை எமக்குத் தாருங்கள் என ஜனாதிபதி கோருவது எவ் வகையில் நியாயமானது என்பதை மக்கள் உணர்ந்து கொள்வர்.

பாராளுமன்ற ஆட்சி ஜனாதிபதியிடம் கொடுக்கப் பட்டாலும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஜே.வி.பி தடையாகவே இருக்கப் போகிறது. இந்த உண்மை ஜனாதிபதி- விமல் வீரவன்ச ஆகியோரின் முரண்பட்ட கருத்துகளில் இருந்து தெளிவாகின்றது.

# எங்களைச் சேர்க்கும் கட்சியில் நாம் இணையத் தயார்

## தேசிய சங்க சம்மேளனம் அறிவிப்பு

(கொழும்பு)

ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தமது வேட்பாளர்கள் 10 பேரைச் சேர்த்துக்கொள்ளத் தயாராகவுள்ள எந்தவொரு கட்சியுடனும் இணைந்து போட்டியிடத் தயார் என பௌத்த பிக்குகளின் அமைப்பான தேசிய சங்கச் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தமது நிபந்தனைகள் அடங்கிய கடிதம் ஒன்றினை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உட்பட பல கட்சிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளதாக பௌத்த பிக்குகள் அமைப்பின் செயலாளர் அத்துலலியரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் கொழும்பில் செய்தியாளர்கள் மாநாடு ஒன்றையும் நடத்தியுள்ளார்.

அங்கு கருத்துத் தெரிவித்த அவர், எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள தேர்தல் மிகவும் முக்கியமானது. இந்தத் தேர்தலில் கட்சிகள் ஒவ்வொன்றும் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

இதனால்தான் பௌத்தபிக்குகள் என்ற ரீதியில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் நாம் நேரடியாகத் தொடர்புபடவுள்ளோம் என்றார். (தி-63,8)

### அம்பாறை மாவட்டத்தில்

## தமிழ் வாக்காளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் வாக்காளர்களின் தொகை அதிகரித்துள்ள போதிலும், தமிழ் வாக்காளர்களின் தொகை அதிகரிப்பில் வீழ்ச்சி காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2002ஆம் ஆண்டு வாக்காளர் பதிவுகளின்படி, அம்பாறை மாவட்டத்தின் வாக்காளர் தொகை 18ஆயிரத்து 547ஆல் கூடியுள்ள போதிலும் தமிழ் வாக்காளர்களின் தொகையில் வீழ்ச்சி காணப்படுகின்றது.

2001ஆம் ஆண்டுத் தேர்தலில் இருந்ததை விட, 2002ஆம் ஆண்டுத் தேர்தலில் 2ஆயிரத்து 536 தமிழ் வாக்காளர்கள் அதிகரித்திருந்தனர். ஆனால், தற்போது 2004ஆம் ஆண்டுத் தேர்தலில் 2135 தமிழ் வாக்காளர்களே அதிகரித்துள்ளனர்.

இதேவேளை, முஸ்லிம் வாக்காளர்கள் 2002ஆம் ஆண்டில் 3ஆயிரத்து 33 பேராலும் 2004ஆம் ஆண்டில் 9ஆயிரத்து 936பேராலும் அதிகரித்திருப்பதாகவும், சிங்கள வாக்காளர்களின் எண்ணிக்கை 2002ஆம் ஆண்டில் 2ஆயிரத்து 616பேராலும் 2004 ஆம் ஆண்டில் 6ஆயிரத்து 367 பேராலும் அதிகரித்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தப் புள்ளிவிபரங்களின்படி 2000ஆம் ஆண்டு வாக்காளர் பதிவுகளில் இருந்து 2002 ஆம் ஆண்டு வாக்காளர் பதிவுகள் வரை 2வருடங்கள் கடந்த நிலையில் இனத்துவ வாக்காளர் அதிகரிப்பில் தமிழ் வாக்காளர்கள் 401 ஆல் வீழ்ச்சி அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (தி-18,8)

## மாகாணசபை உறுப்பினர்கள் ஐ.தே.கட்சியில் இணைவு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் மாகாணசபை உறுப் பினர்கள் மூவரும் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரும் நேற்று முன்தினம் ஐக்கியதேசியக் கட்சியில் இணைந் துள்ளனர்.

இவர்களுள் வடமேல் மாகாணசபைத் தலைவர் உட்பட மூன்று உறுப்பினர்களும் அத்தனவல்லப் பிரதேச சபைத் தலைவரும் அடங்குவர்.

வடமேல் மாகாண சபைத் தலைவர் டி.என்.சந்திரதிலக, மாகாணசபை உறுப்பினர்களான இந்திரா ரந்தெல்ல, பி.ஏ. குணரத்தின மற்றும் அத்தனவெல்லப் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் பீற்றர் கருணாரட்ணவும் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தமது கட்சி உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டனர். (தி-63,8)

### தேர்தல்களம்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முஸ்லிம் வேட்பாளர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தேர்தலில் போட்டியிடுவதற்கு முஸ்லிம் வேட்பாளர் ஒருவரை நியமிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்-முஸ்லிம் மக்களிடையே இன, மத நல்லுறவை ஏற்படுத்தும் வகையிலேயே இம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுவதற்கு ஏற்கனவே தமிழ் வேட்பாளர்களின் பெயர்கள் பட்டியலில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் ஐக்கியதேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது வடக்கு-கிழக்கு மாகாண முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பட்டியலில் போட்டியிடச் செய்வதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(தி-18)

### நீதிமன்றத்துக்கு சமுகமளிக்குமாறு

## தொழில் அமைச்சருக்கு நீதி மன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

அரசாங்கத்தின் உத்தேச இழப்பீட்டுத் திட்டம் பற்றி விளக்கம் அளிப்பதற்கு நீதிமன்றத்திற்குச் சமுகமளிக்குமாறு தொழில் அமைச்சர், தொழில் ஆணையாளர் ஆகியோருக்கு மேன்முறையீட்டு நீதிபதிகளால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கம்பனிகளுக்கு இடையிலான தொழிலாளர் சங்கம் சமர்ப்பித்த இழப்பீட்டு முறையை விசாரிப்பதற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

அரசாங்கத்தின் உத்தேச இழப்பீட்டுத் திட்டத்தின் ஊடாக தனியார் துறைசார் ஊழியர்களின் உரிமைகள் மறுக்கப்படுவதாக மனுதாரர்கள் குற்றஞ்சாட்டியுள்ளார்கள். இந்த யோசனைகள் அரசியல் யாப்பிற்கு முரணானது என்பதால் அவற்றைச் செல்லுபடியற்றது என உத்தரவு பிறப்பிக்கவேண்டும் என்றும் அவர்கள் நீதிமன்றைக் கேட்டுள்ளார்கள். (தி-60,10)

### ஓம் தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

நீ செய்த தவறுகளை வாழ்த்து. அந்தத் தவறுகள் நீ அறியாமலே உனக்கு வழி காட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன. துன்பங்களுக்கும் நல்வாழ்த்துக்கள். இன்பங்களுக்கும் நல்வாழ்த்துக்கள்.

மற்றவர்களுக்கும் நன்மை செய்வதுதான் புண்ணியமாகும். மற்றவர்களுக்கு தீமை செய்வது பாவமாகும்.

சுவாமி விவேகானந்தர்

### பாராளுமன்றக் கலைப்பால்

## தேயிலைக் கைத்தொழிலுக்கு 160 மில்லியன் ரூபா நஷ்டம்

(கொழும்பு)

பாராளுமன்றக் கலைப்பின் எதிரொலியாக இலங்கைத் தேயிலைக் கைத்தொழிலுக்கு 160 மில்லியன்ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

தாய்லாந்துக்கும் - இலங்கைக்கும் இடையே சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவதற்கு கடந்த 9ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும், தாய்லாந்துப் பிரதமருக்கும் இடையில் உடன்பாடு காணப்படவிருந்தது.

ஆயினும், அதற்கு முன்பதாகவே 7ஆம் திகதி நள்ளிரவு பாராளுமன்றம் கலைக்கப்பட்டுவிட்டது. இதனையடுத்து பிரதமர் ரணிலின் தாய்லாந்து விஜயம் ஒத்திவைக்கப்பட்டதுடன், இரு நாடுகளுக்கும் இடையில் வர்த்தக ரீதியில் பெரும் பலத்தை ஏற்படுத்தக்கூடியதான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை கைச்சாத்தும் தடைப்பட்டது.

இவ் ஒப்பந்தத்தின்படி, இலங்கைத் தேயிலைக்கான தற்போதைய வரியை 55சதவீதத்தால் குறைப்பதற்கும், இலங்கை மாணிக்கக்கல் மற்றும் தைத்த ஆடைகள் போன்றவற்றிற்கும் விசேட சலுகைகள் வழங்கப்படவிருந்தன.

ஆயினும், திடீர் பாராளுமன்றக் கலைப்பால் இவையனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதுடன், இதனால் 160 மில்லியன் ரூபா நிதியும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதென லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் அரசியல் ஓர் ஸ்திர நிலையை அடையும்வரையில் இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதைத் தாமதப்படுத்துவதாக தாய்லாந்துப் பிரதமர் கருத்து வெளியிட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (தி-18)

## பளையில் திருட்டு

(மருதங்கேணி)

பளைப்பிரதேசத்தில் உள்ள குடிநீர்த்தொட்டியில் நீர் விநியோகத் திருகிகள் இரண்டாவது முறையாகத் திருடப்பட்டுள்ளன.

யுனிசெப் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட இக் குடிநீர்த் தொட்டி அண்மையில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டது. இனம்தெரியாதோரால் குடிநீர்த் தொட்டியின் திருகிகள் திருடப்பட்டுள்ளதால் இப்பிரதேசத்திற்கான குடிநீர் விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளது.(தி-35)

உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்
களுக்கும் பார்சல் சேவைகளுக்கும்
MANOJ EXPRESS SERVICE
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
இல.13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்.: 021 222 3916
கொழும்பு: T.P.: 2390128 Fax: 2399650

# முன்னாள் அமைச்சர் மங்கள குற்றச்சாட்டிலிருந்து விடுதலை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவும் வேறு 5 பேரும் மாத்தறை மாவட்ட மேலதிக நீதிவான் ஜினதாசவின் தீர்ப்பினால் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

ஐ.தே.முன்னணியின் பிரதி அமைச்சர்களுள் ஒருவரான சாகல ரத்னாயக்கவும், அவரது ஆதரவாளர்களும் சென்ற வாகனத்தை அக்குரஸ்ஸவில் வைத்து 2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4ஆம் திகதி மங்களசமரவீர தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

அக்குரஸ்ஸ பொலிஸாரால் ஆரம்பத்தில் தொடக்கப்பட்ட விசாரணைகள் இடையில் சி.ஐ.டியினரால் பொறுப்பேற்கப்பட்டன.

இவ்வழக்கில் எம்.எம்.சுபையரும், ஸ்ரீபதி சூரியாராய்ச்சியும் மங்களசமரவீர சார்பில் ஆஜராகியிருந்தனர். (இ-6)

# ஐக்கிய தேசியக் கட்சியில் மேலும் இருவர் இணைவு



(கொழும்பு)

வட மத்திய மாகாண சபையின் அமைச்சர் ஒருவரும், தென் மாகாண சபையின் பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினர் ஒருவரும் ஐக்கிய தேசியக் கட்சியில் நேற்று இணைந்து கொண்டுள்ளனர்.

வட மத்திய மாகாண சபையின் கிராம அபிவிருத்தி அமைச்சர் கே.பி. தென்னக்கோன் தென் மாகாணத்தின் பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினர் வியயபால பெட்டியராச்சி ஆகிய இருவரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையை நேற்று பெற்றுக்கொண்டனர்.

ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்ததன் பின்னர் அனுராதபுரத்தில் பாதுகாப்பற்ற கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு மீண்டும் யுத்தம் ஒன்று ஏற்படும் எனும் அச்சம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியில் இன்று இணைந்து கொண்டுள்ள கே.பி. தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் தேவைகளுக்கு ஏற்ப செயற்படும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயற்பாடுகளில் அதிருப்தியடைந்த பலர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் விஜயபால பெட்டியராச்சி தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தாம் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளாக போட்டியிடவுள்ளதாக இருவரும் தெரிவித்தனர். (இ)

# விளையாட்டுச் செய்திகள்

## அவுஸ்திரேலிய அணியிடம் இலங்கை மண்கௌவியது

அவுஸ்திரேலிய அணிக்கும் இலங்கை கிரிக்கெற் தலைவர் அணிக்கும் இடையில் நேற்று மொரட்டுவ டிரோன் பெர்ணாண்டோ மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் அவுஸ்திரேலிய அணி 5 விக்கேற்றுக்களால் வெற்றியீட்டியுள்ளது.

இப் போட்டியில் முதலில் துடுபபெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவாகள் முடிவில் 8 விக்கெற்றுக்களை இழநது 283 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெகன் முபாரக் 58 ஓட்டங்களையும் சமன் ஜயந்த 50 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் அவுஸ்திரேலிய அணி சார்பில் பிரட்ஹொக் 46 ஓட்டங்களுக்கு 2 விக்கெற்றுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி 44.1 ஓவர்களில் 5 விக்கெற்றை இழந்து 284 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெற்றுக்களால் அபார வெற்றியீட்டியுள்ளது. இவ் அணி சார்பில் றிக்கிப் பொண்டிங் 57 ஓட்டங்களையும், அன்ரு சைமன்ஸ் 49 ஓட்டங்களையும் பெற்றனர்.(ச-121)

## நியூஸிலாந்து அணியிடம் தென்னாபிரிக்கா தோல்வி

நியூஸிலாந்திற்கு கிறிகெற் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணியினர் நியூஸ்லாந்து அணிக்கெதிராக நேற்று சிறைஸ்ற் சேர்ச்சில் நடைபெற்ற 2வது சர்வதேச ஒருநாள் போட்டியில் 5 விக்கெற்றுக்களால் தோல்வியடைந்துள்ளனர்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணியினர் 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெற்றுக்களை இழந்து 253 ஓட்டங்களைப் பெற்றனர்.

தென்னாபிரிக்க அணி சார்பில் துடுப்பாட்டத்தில் கிறேம் ஸ்மித் 80 ஓட்டங்களையும், புறடல்வ் 42 ஓட்டங்களையும் மார்க் பௌச்சர் 40 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் நியூஸிலாந்து அணி சார்பில் ரொவ்வி மில்ஸ், கெய்ன்ஸ் தலா 2 விக்கெற்றுக்களை வீழ்த்தினர்.

254 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணியினர் 45.1 ஓவர்களில் 5 விக்கெற்றுக்களை இழந்து வெற்றி பெற்றனர்.

இவ்வணி சார்பில் ஸ்டீபன் பிளமிங் 108 ஓட்டங்களையும், மக்மிலன் 71 ஓட்டங்களையும் பெறறுக் கொடுத்தனர். பந்து வீச்சில் தென்னாபிரிக்கா அணி சார்பில் நிற்னி 3 விக்கெற்றுக்களையும் குளுஸ்னர் ஜக்கலிஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெற்றுக்களையும் கைப்பற்றினர். (ந-121)

# சம்பந்தனின் மனு நாளை விசாரணை

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்தியகுழுக் கூட்டங்களைக் கூட்டுவதற்கு மாவட்ட நீதிமன்றம் விதித்துள்ள தடையுத்தரவை நீக்குமாறு ஆர்.சம்பந்தன், ஜோசேப் பரராஜசிங்கம் ஆகியோர் தாக்கல் செய்த மனு நாளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளான என்.கே.உடலகம, எஸ். இமாம் ஆகியோர் இதனை அறிவித்துள்ளனர்.

மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எஸ்.சிவராஜா, எம்.ஏ.சுமந்திரன், கே.பிரபாகரன், செல்வரட்ணம் ஆகியோர் ஆஜராகவுள்ளனர். (த)

# நிமலராஜன் வழக்கு 5வது சந்தேகநபருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் ம.நிமலராஜன் படுகொலை வழக்கின் ஐந்தாவது சந்தேகநபரான பாலச்சந்திரன் உதயபவன் நேற்று யாழ். நீதிமன்றில் யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் ஆ.ரி.விக்னராசா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

இவரை எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச)

# யாழ். தே.க.கல்லூரியில் நேற்று பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர்கள் நேற்று பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதனால் விரிவுரைகள் எதுவும் இடம்பெறவில்லை. கல்லூரியில் நேற்று முன்தினம் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட ஆசிரிய மாணவர்கள் விரிவுரையாளர்களை மதிக்காமல் நடந்துகொண்டதாகவும், இதனைக் கண்டித்தே நேற்று விரிவுரையாளர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, கல்லூரியின் விடுதியில் தங்கியிருந்த 2 ஆசிரிய மாணவர்களை கல்லூரி நிர்வாகம் வெளியேற்றியமையைக் கண்டித்தே ஆசிரிய மாணவர்களால் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டு விரிவுரையாளர்களை வெளியே செல்லவிடாது கதவைப் பூட்டியதாகவும் தெரியவருகிறது.

இவ்வாறு விரிவுரையாளர்களை மதிக்காமல் கதவைப் பூட்டியமையைக் கண்டித்தே நேற்று விரிவுரையாளர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இது இவ்வாறு இருக்க வெளியேற்றப்பட்ட இரு ஆசிரிய மாணவர்களும் மீண்டும் கல்லூரிக்குள் உள்வாங்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# தமிழ்ச்செல்வனுடன் மகேஸ்வரன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனுக்குமிடையில் நேற்று முன்தினம் சந்திப்பொன்று இடம் பெற்றதாகத் தெரியவருகிறது.

கிளிநொச்சியில் இடம்பெற்ற இச்சந்திப்பில் பாராளுமன்றப் பொதுத் தேர்தல் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

தமிழ்மக்களின் ஐக்கியத்தை வெளிப்படுத்தும் வகையில் தேர்தலில் ஒரே கொள்கையில் ஒன்றுபடுவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

எனினும், இச்சந்திப்புக் குறித்து உத்தியோகபூர்வமாக எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.(இ)

### கடந்த இரு வருட...

கண்டவாறு கூறினார்.

அந்த உரையில் அவர் மேலும் கூறியிருப்பதாவது;

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு பெரும்பாலான ஆசனங்கள் இருந்த நிலையில் உலகில் எங்குமில்லாதவாறு அரசாங்கத்துடன் ஆலோசனை செய்யாமலே ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்துள்ளார்.

ஜனாதிபதியின் இத்தகைய செயலானது மக்களின் ஆணையை உதறித் தள்ளிய ஒரு செயற்பாடாகும். மேலும் பாராளுமன்றம் தொடர்பாக பொதுத் தேர்தல் ஒன்றிற்கு ஏப்ரல் மாதம் 2ம் திகதிக்கு நாள் குறிக்கப்பட்ட நிலையில் இந்த விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு அன்றைய தினம் மக்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

எமது இரண்டு வருட ஆட்சியின் போது பல குறைபாடுகளையும் தவறுகளையும், விட்டுள்ளோம். இத் தவறுகளும், குறைபாடுகளும் யார் மூலம் ஏற்பட்டிருந்தாலும் அதற்காக அரசாங்கத்தின் சார்பில் பிரதமர் என்ற அடிப்படையில் நான் அதனை ஏற்றுக் கொள்கிறேன். அதற்காக நான் வருத்தப்படுகிறேன்.

இருபது வருடகால யுத்தத்தினால் அழிவைச் சந்தித்த நாட்டிற்கு இரண்டு வருட காலம் சமாதானத்தை ஏற்படுத்தி நாட்டை அபிவிருத்தி செயவதற்கு மக்களின் ஒத்துழைப்பு எமக்குக் கிடைத்தது. இதற்காக நான் மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன் என்றும் கூறினார்.

### தமிழ்க்கூட்டமைப்பினருடன்...

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னம் கிடைகாவிடின் எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என்பது குறித்து நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது. எனினும், இறுதி முடிவு பின்னர் எடுப்பதென தீர்மானிக்கப்பட்டது.

முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனை கூட்டமைப்பில் இணைப்பது தொடர்பாகவும் புளொட் அமைப்பினை கூட்டமைப்புக்குள் இணைத்துக் கொளவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (இ-ச)

### யாழ்ப்பாண...

தெரியவருகிறது.

இதேவேளை வவுனியா மாவட்டத் தேர்தல் தொகுதிக்கு அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (இ)

### சுதந்திர..

தைகளை முன்னெடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இணைத்துள்ள அனைத்துக் கட்சிகளும் இணங்கியுள்ளன.

இதன் மூலம் மக்கள் மத்தியில் நிலவும் நம்பிக்கையீனத்தை மாற்றியமைத்து நம்பிக்கை ஏற்படுத்தி ஜனநாயகத்தை உறுதிப்படுத்தவுள்ளளோம்.

இந் நாட்டில் வாழுகின்ற பெரும்பானமை மக்களின் ஆதரவுடன் பேச்சுவார்த்தை மூலமான நியாயமான-நீடித்த தீர்வொன்றை இலக்காகக் கொண்ட செயல் திட்டம் ஒன்றை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைத்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் உத்தரவின் பிரகாரம் தற்போதைய யுத்தநிறுத்தம் தொடர்ந்தும் அமுலில் உள்ளது. இது எமது புதிய முன்னணியினது தெளிவான கொள்கையாகும். தற்போதைய சூழ் நிலையில் மக்களுக்கு யுத்தம் தேவையில்லை என்றும் கதிர்காமர் கூறினார்.

இக் கலந்துரையாடலில் வர்த்தக சமூகத்தின் ஒருங்கிணைத் தலைவர் மஹிந்த சமரசூரிய உட்பட பிரபல வர்த்தக பிரமுகர்களும், கைத்தொழில் சபை பிரமுகர்களுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த மஹிந்த ராஜபக்ஸ, தினேஸ் குணவர்த்தனா, பேரியல் அஷ்ரப், ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க உட்பட பலர் கலந்து கொண்டனர். (ம)

## பிரபாவின் எதிர்பார்ப்பின்படி...

எமது பிரதேசத்தில் பிரசாரம் மேற்கொள்ளவும் தடையில்லை.

தமிழ் மக்கள் எந்த லட்சியத்திற்காக ஒரு தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றுபட்டு நிற்கிறார்களோ, அதை இந்தத் தேர்தல் ஊடாக சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்துவார்கள்.

இந்த அடிப்படையில்தான் விடுதலைப் புலிகளும் தமிழ்க் கூட்டமைப்பும் ஒன்றிணைந்து செயற்படுகிறார்கள்.

ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் ஆதரவு இம்முறைத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு உண்டு. முன்னாள் இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கும் இக்கூட்டமைப்பில் இடம்கொடுப்பதற்கு ஆவலாக உள்ளோம்.

எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாக்களிப்பு இடம்பெறுவது தொடர்பாக விரைவில் முடிவு எடுக்கப்படும்.

பேரினவாதக் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதற்கும் தடையில்லை. ஆனால், இவர்களை மக்கள் நிராகரிப்பார்கள் என்றும் தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார். (இ-ச)

### புலிகளுடன்...

சமாதானப் பேச்சினை நடாத்துவது சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் இரு வேறு போக்குகளைக் கொண்டிருப்பது கேலிக்குரியது. இலங்கை ஒரே நாடு என ஜே.வி.பியும் அதிகாரப் பரவலாக்கம் அவசியம் என சுதந்திரக் கட்சியும் கருதுகிறது. எமது கோரிக்கைகளை அவர்கள் ஏற்றுக் கொண்டால் பத்துமாவட்டங்களில் தலா ஒவ்வொரு தேர்வாளரை எமது சார்பில் நிறுத்துவோம்.

எல்லா மாவட்டங்களிலும் எமது தேர்வாளர்கள் முதலிடம் பெறுவார்கள். இலங்கை சிங்களவர்களின் நாடு எவ்விதத்திலும் அது பிரிபடக் கூடாது என்பதை கூட்டணி ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இதைவிட விடுதலைப் புலிகளுடன கலந்துரையாடக் கூடாது. மதுபானக் கடைகளை திறக்க அனுமதி வழங்கக் கூடாது. மதமாற்ற தடைச்சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்பன எமது கோரிக்கைகள் என்று தேரர் மேலும் தெரிவித்தார்.(இ)

### சிவராத்திரியை...

மேற்கொள்வதற்கும் வசதி செய்து கொடுக்கப்படடுள்ளதாக பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

இம் மூன்று தினங்களிலும் பிற்பகல் 6.30 மணிவரை தமது உதவிகளை வழங்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இணங்கியுள்ளது. இந்நேர மாற்றம் குறித்த இணக்கத்தை போர் நிறுத்தக கண்காணிப்புக் குழு மற்றும் புலிகளிடம் இருந்து எதிர்பார்ப்பதாகவும் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது. (ச)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.02.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.